[Registered No. M. 329.]

VOL. I. AUGUST & SEPTEMBER 1902. Nos. 4 & 5.

THE

Suguna Sundaram

A MONTHLY TAMIL JOURNAL

சுகுணசுந்தரம்.

(மாதாந்தரத் தமிழ்ப்பத்திரிகை)

"கற்றீண்டு மெய்ப்பொருள் கண்டார் தலைப்படுவர்
மற்றீண்டு வாராநெறி"—குறள்.

CONTENTS.	PAGE.	அட்டவணை.	பக்கம்.
1. Coronation.	74	1. பட்டாபிஷேகம்	74
2. Devotion.	76	2. பக்தி	76
3. Subhashani (by T. P. V.)	80	3. சுபாஷணி (டி. பி. வி.)	80
4. Partiality and Treachery among brothers &c.	85	4. பக்ஷபாதமும் பிராத்ரு துரோகமும்;பிறமாதர் நட்பின் நிந்தை	85
5. Roofs (by S. A.)	94	5. கூரைகள் (எஸ். எ.)	94
6. Hints on Sanitation	96	6. சுகாதாரவிளக்க குறிப்புகள்	96
7. S. I. R. Company	97	7. தெ. இ. ரெ. கம்பெனி	97
8. Thirthapuri (by T. P. V.)	98	8. தீர்த்தபுரி (டி. பி. வி.)	98
9. The cruelty of the Ruling Body against T. Language	101	9. அருமைத்தமிழுக்கர சாங்கத்தால் நேரிடும் அபத்து	101
10. Invaluable Hints to Document writers	104	10. தஸ்தாவேஜ் எழுதுகிறவர்கட்கு வேண்டிய குறிப்புகள்	104
11. Perumal Thirumoli	110	11. பெருமாள் திருமொழி	110
12. Ten devotions	114	12. பத்துவித பக்தியின் விவரம்	114
13. Obedience	115	13. கீழ்ப்படிதல்	115
14. The Suttee	117	14. சஹகமனம்	117
15. Felicitating of Sugunasundaram (by V. T.)	120	15. சுகுணசுந்தர வாழ்த்து (வி. தில்லைநாயக முதலியார்	120

Published by

T. S. SUBBARAMA AIYER, Inamdhar.

TURAIYUR.

Yearly Subscription Rs. 3—0—0

Half Yearly Subscription. Rs. 1—12—0.

All Rights Reserved.

PRINETD AT THE DODSON PRESS, TRICHINOPOLY.

NOTICE.

Although there are several journals world-wide, yet we request the learned public to lend a helping hand towards the advancement of this journal also.

அறிவிப்பு.

உலகிலுள்ள ஜனங்கள் புருஷார்த்தங்களை அறிந்தனுபவித்தற்கு, பத்திரிகைகள், தருமாதிகளை அன்னோருக்கு ஞாபகப்படுத்திக்கொண்டு சஞ்சரிப்பவைகள் பல உளவாயினும், வித்வான்கள் பாஷையும் நல்லொழுக்கமும் அபிவிருத்தியடைவதில் நோக்கமுடையவர்களாகலின், இந்நூதனத்தமிழ்ப் பத்திரிகையையும் ஆதரிப்பதற்குக்கடமைப்பட்டிருத்தலால், அத்தகைய கல்விமான்கள் இடையில் தளர்ச்சியடையாவண்ணம் பாதுகாத்து உதவி செய்வார்களென நம்புகிறோம்.

1 திரவிடமா பாடியத்தாராதி முனிபுங்கவர்கள்
பரவாவடுதுறை வாழ்பண்பார்—குருமரபுக்
கோர்தீபமாகி யொளிறம்பலவாணப்
பேரானடி யெமக்குப்பேறு.
2 ஆதலினீ யன்னோனடிக்கமலஞ் சென்றிறைஞ்சப்
போதுதியேலஞ்சுகுண சுந்தரா—வாதவருட்
குன்றன்னோ சிதரக்கொண்டிக்கு வலயத்திற்
சென்றிருமாந்தே திரியலாம்.

ஆற்றுப்படை.

1 வேற்கரசே யென்ன விபுர்தலைக்காத்தருளும்
பாற்கர சேதுபதித்துரையைப்—போற்றுதியேல்
இன்புற்றுவாழ் சுகுணசுந்தர விம்மேதினியில்
வன்புற்றுச் சூழ்ந்துவரலாம்.

வேண்டுகோள்.

2 ஏதுபதிச்செல்வா மென்றெண்ணியிடருழக்கு
மாதுலர்போலுஞ் சுகுண சுந்தரநின்—சேத
மதிக்குடைக்கீழ் தங்கமதுர மொழிச்சேது
பதிப்பாற் கரதுரைகண்பார்.

ஆற்றுப்படை

4 அறுசுவைபோலென்று மவனியுளோராயப்
பெறு சுகுணசுந்தர நீபெட்பி—னுறுதற்
குரைத்தேவர் பாலெனுலகு புகழ்பாண்டித்
துரைத்தேவர் பாலடைந்து சொல்.

ADVERTS: Favourable Rates.—Yearly Rs. 100 per page. For ½ a page Rs. 60. English adverts at as. 6 per line. For othor details apply to the Managing Proprietor "Sugunasundaram" Office, Turaiyur Musiri Taluq.

உ

சுகுண சுந்தரம்.

(மாதந்தோறும் பிரசுரிக்கப்படுந் தமிழ்ப்பத்திரிகை.)

வாலம் 1. 1902௵ ஆகஸ்டு செப்டம்பர். ஸி. 4 & 5.

RATES OF SUBSCRIPTION.

Yearly including Postage	Rs.	3—0—0
Half yearly ,,	,,	,,	1-12—0
Single copy ,,	,,	,,	0—5—0
Back numbers	,,	,,	0—6—0

Foreign Subscription 6. S. Per Annum.

Subscriptions begin with 1st May of each year.

A discount of 8 as. and 4 as. respectively will be allowed to regular annual and half yearly Subscribers, and a grace of two months to the former and one month to the latter Subscribers will be granted for the prepayment of Subscriptions, to entitle them to the discount aforesaid.

A copy will be sent free to those who contribute articles to the Journal.

The Editor will not undertake to publish any matter other than he deems worth publishing. Contributors are requested to write their names and address legibly.

☞ The Managing Proprietor reserves to himself the right of republishing all matters that appear in this journal. All correspondents are requested to enclose, postage stamps to ensure a reply by quoting the register number.

Donations will be thankfully received.

Missing numbers cannot be replaced without payment if not brought to notice then and there.

சந்தாவிவரம்.

௵ 1க்கு தபால்கூலிஉள்பட	ரூ.		3—0—0
ஆறுமாதத்திற்கு	,,	,,	1-12—0
பிரதி ஒன்றுக்கு	,,	,,	0—5—0
பழய பிரதி	,,	,,	0—6—0

இப்பத்திரிகைக்கு மே௴ முதல் சந்தாக்கணக்கு வைக்கப்படும். மே மாதத்துக்குள் சந்தாத்தொகையை முன் பணமாய்ச் செலுத்துபவர்களுக்கு வருஷச் சந்தாவில் அணா 8ம், ஆறுமாதச்சந்தாவில் அணா 4ம், தள்ளிக்கொடுக்கப்படும்; வருஷந்தோறும் கிரமமாய் சந்தா செலுத்துபவர்களுக்கு இரண்டுமாதத் தவணையும், ஆறுமாதத்திற்கு ஒருதடவை செலுத்துபவர்களுக்கு ஒரு மாதத்தவணையுங் கொடுக்கப்படும். விஷயங்க ளெழுதிக் கொடுக்கும் பண்டிதர்களுக்கு இனமாக ஒரு புத்தகம் அனுப்பிவரப்படும்.

அறிவிப்பு:—இந்த பத்திரிகைக்குப்பண்டிதர்கள் எழுதிக்கொடுக்கும் விஷயங்கள் தகுந்தயோக்யதை யுடையவைகளாயிருந்தாலன்றி பிரசுரிக்கப்படமாட்டா; விஷயமெழுதிக்கொடுப்பவர் அதில் தங்கள் கையொப்பமும், விலாஸமுந்தெளிவாயெழுதியனுப்பவேண்டும்.

☞ புத்தகரூபமாய் வெளிப்படுவதற்குரிய விஷயங்களை, எழுதியனுப்பினோர் அனுமதியை எதிர்பாராமலே அச்சிடுவதற்கு எமக்கு சுதந்திரமுண்டு.

நன்கொடைகளை வந்தனங்களுடன் பெற்றுக்கொள்ளப்படும்.

தவரிப்போகும்நிம்பர்கள் அப்போதைக்கப்போது நம்முடைய நோட்டீசுக்கு கொண்டுவந்தாலன்றி, பணம் செலுத்தாமல் மறுபடி அனுப்பப்படமாட்டா.

CORONATION.

பட்டாபிஷேகம்.

துறையூரில்நாள ௲௯௱௨ ஆக
ஸ்டுமீ 9௳ நடந்த

இந்தியாசக்கரவர்த்தி
யவர்களின்

முடிசூட்டுச்சிறப்பு.

1. தேர் செலுத்திவரு பிரிதி கொற்றவொளி திசைசெலுத்திவரு செயவினொண்
பார்துதிக்குமெழி லிங்கிலாந்துவள நாடுபற்பல நகரினும்
பேர்சிறப்பவள ரிலண்டன்மாநகர் பிறங்குமாளிகையலங்குபூந்
தார்மிலைச்சுமணி முடிதரித்ததிரு நாளினிற்றகுதிசாலவே;

2. யந்திரச்சகடு தந்திரிச்சமா சாரமும் பலமிஷன்களுந்
தந்திரத்தபல் வேலைசெய்துவரு தகுதிபெற்ற சாமான்களு
மிந்தராச்சியத்தன்றி முன்னுள விராமனாதியர் நாளினும்
வந்ததின்றென வித்தேயமாந்தர்கண் மகிழ்வொடுந்துதிகள் சொல்லவே;

3. அரசரும்மவர் பாலுறும்பரி சனமுமன்பறு பகைவரும்
விரசுதுன்புசெய்கள்வரும்பிணி மிருகமாதிய பயமெனுங்
கரிசறப்புரி விக்டோரியாமகா ராணியார் தருகான்முளை
பரசுமொண்புக ழெட்வெர்டெனும் மரசர்பயிலுநல் லரசியற்றவே;

4. வேலைசூழ்புவி மன்னர்யாரும் விரும்பிமொய்த்துத முடிபுனை
மாலைதாழ வணங்கியன்னவர் வரிசையாற்றுதிபன்னவே;
வேலைராவிழி மாதர்வாழ்த்தொலி சிறப்பமங்கலதூரிய
மாலைவார்கடல் போன்முழக்குற மணிசெயாதனம் வைகியே,

வேறு.

5. கிறந்தலைப்புகும்படைக் கலங்கிழித்தெழும்புணைத்
திறந்தலைத்தெழுந்தவச் சலங்குளித்தொழிந்திடப்
பறந்தலைப்புகுந்துபோர்க் கடந்திலாப்பவந்தெறு
மறந்தலைச்சிறந்திடப் பரந்தவப்பரர்தொழ,

6. திருமங்கை நனிதங்கு பரியங்கநிகர் துங்க
மருமங்கைபுனைவண்டு படுதொங்கலவிர்தங்க
தருமங்மைகொளுமன்ன ரிடம்வந்திவுலகன்னை
யருமந்தகலைமங்கை யமர்கின்றபடியென்ன,

வேறு.

7. இனிதுறத்தலை யறமெடுத்தென வெழின்மனைத்தலை புனைகொடி
சனைகடற்புவி மகள்கரத்துறு கதிர்மணிப்புனை பந்தெனப்
பனிமதித்தலை யுறவசைத்திடு நகரினுக்கணிபலசெயா
நனிகதிர்ப்பொலி மணிமுடித்தலை நவையறப்புனை செய்தனர்;

8. மாசிலாதவனுமலைப்பெயர் வள்ளலாங்கில மன்னர்பாற்
றுசிலாகியித் துறைசைமாநகர் தன்னிலேயுறை ஜமீனின்மா
னேசராகிவதிந்திவிந்திய மன்னர்மாமுடி சூடிநாள்
பூசையாதியபலசிறப்புகள் கோயிலிற்பொலிவெய்தவும்,

9. அந்தணர்க்கறு சுவையவுண்டி யளிக்கவுந் திருநகரெலாங்
கொந்தலர்ப்புனை மாலையாதிய கொண்டுதோரணம் வீக்கவுஞ்
செந்திருப்பொலி மாடமாளிகை புதிதுறச்செயுஞ் சித்திர
நந்துறச்செய வும்பசுங்கொடி காட்டவும்பறை பலவுமாய்,

10. மந்தரப்பெருமலை கலக்குறு வாரிகோவெனு மாறுகோ
லந்தரத்திரு நகரினும்புக வறையவுந்திருவிளக்கொடு
சுந்தரப்புரினைறைகுடம்பல தூயவேதிகை வைக்கவும்
பந்தரிற்பயில் வாழையொண்கமுகின் கரும்பு பழக்குலை,

11. தெங்குவண்பனை யீந்தினொண்குலை சிறப்பயாத்துறுமில்லெலாம்
துங்கநற்றிருநாள்புரிந்திட தூய்மையாயவை துய்ப்பவுந்
தங்குமிச்சுக மொனாளுநம்மிடை தங்குமாலெனவெண்ணியே
பண்களிப்பொடுபாடியாடவும பண்புறச்செய்தானறோ

டி. பி. விசுவநாதபிள்ளை.

பக்தி.

பக்தி என்பது கடவுளை திரிகரணசுத்தியாக வழிபடுவது. அவ்வழிபாடு பரார்த்தமான தேவாலயங்களிலும், ஆத்மார்த்தமான சாளிக்கிராம பாணலிங்கமுதலிய மூர்த்தங்களிலும் செய்யப்படும். அது பிரீதிகரமாக மனதினால் தியானித்தலும், வாக்கினால் ஸ்தோத்திரம் பண்ணுதலும், காயத்தினால் பிரதக்ஷண நமஸ்காராதிகள் செய்தலுமாம்.

भक्तियोगान्मुक्तिः ॥
"பக்தியோகாந்முக்திஹி"
मोक्षकारण सामग्र्यां भक्तिरेव गरीयसी ॥
"மோக்ஷகாரண ஸாமக்ரயாம மக்திரேவகரீயஸீ"

என்றுஞ்சொல்லப்பட்டிருக்கிற உபநிஷத் வாக்கியங்களின்படி பக்தியே முக்திக்குக்காரணமாகின்றது. "எவனொருவன் தன் குடும்பக்கவலையில்லாமல் எப்பொழுது மென்னிடத்திலேயே பக்தி செலுத்துகிறானோ, அவனுடைய குடும்ப பாரத்தை நானே வகித்துக்கொண்டு சம்ரக்ஷிக்கின்றேன்" என்றும், "எவனொருவன் என்னிடத்திலுண்மையான ப்க்தி செய்கிறானோ, அவன் மாயாகுணங்களாகியசத்வ, ரஜஸ், தமோகுணங்களைக்கடந்து, நிர்க்குணஸ்வரூபமான பரப்பிரமத்தில்லயப்படுகிறான்" என்றும், "பக்தியுடையவர்களிலெவனொருவன் என்னையே ஆப்தனாக நம்பி நாமசங்கீர்த்தனம் பண்ணுகிறானோ அவனே பரமபக்தனாக என்னால் நன்கு மதிக்கப்படுகிறான்" என்றும், கண்ணன்கீதையில் கூறியிருக்கின்றனர்.

"பிரவிப்பெருங்கடல் நீந்துவர் நீந்தா
ரிறைவனடி சேராதார்;"

"கோளில் பொறியிற் குணமிலவே யெண்குணத்தான்
றாளை வணங்காத்தலை."

என்று உத்தரவேதங்கூறியிருக்கின்றது. இத்தகையபக்தி அகப்பக்தி (அந்தரங்கபக்தி) என்றும், புறப்பக்தி (பாஹ்யபக்தி) என்றுமிருவகைப்படும். அவைகளை,

सगुणनिर्गुणस्वरूपं ब्रह्म ॥

"ஸகுணநிர்குணஸ்வரூபம்ப்ரம்ஹா"

என்ற அதர்வண வேதவாக்கியத்தின்படி 'நிற்குணோ பாஸனை' என்றும், 'ஸகுணோபாஸனை' என்றும் சொல்லப்பட்டிருக்கிற இருவகை உபாஸனை கட்குச்சாம்யமாய்ச்சொல்லலாம்.

அகப்பக்தியானது புறப்பக்தியைத் தனக்குச் சாதனமாகக்கொண்டதாயிருக்கிறது.

"செல்லாரும் பொழில்புடைசூழ் புலியூரம்பலவாண தேவாவும்மைக்
கல்லாலும் வில்லாலும் பிரம்பாலுஞ் செருப்பாலுங்கடிந்துசாடு
மெல்லாரு நல்லவரென்றெண்ணி யருளீந்ததென்னயிகழ்ச்சியொன்றுஞ்
சொல்லாமல் மலரால் விட்டெறிந்தவனைக்காய்ந்ததென்ன சொல்லுவீரே"

"அறனடிக்கன்பர் செய்த பாவம் புண்ணியமதாகும்
பரனடிக்கன்பிலாதார் புண்ணியம் பாவமாகும்
வரர்தமிற்றக்கன்செய்தமாவேள்வித்தீமைத்தாகி
நரர்தமிற்பாலன்செய்தபாதகநன்மையாய்த்தே."

"மாசற்ற நெஞ்சுடையார் வன் சொலினிதேனையவர்
பேசுற்ற வின்சொல் பிறிதென்க—விசற்கு
நல்லோனெறிசிலையோ நண்ணுதாலொண் கருப்பு
வில்லோன் மலரோ விருப்பு."

"மார்க்காவர்தித பாதுகா பசுபதேரங் கஸ்யகூர்ச்சாயதே
கண்டுஷாம்பு னிஷேசனம் புராரிபோர் திவ்யாபிஷேசாயதே
கிஞ்சித் பக்ஷிதமாம்ஸ சேஷகபளம நவ்யோபஹாராயதே
பக்திகிந்துக ரோத்யஹோ வநசரோ பக்தாவதம்ஸாயதே"

मार्गावर्तित पादुका पशुपतेरङ्गस्य कूर्चायते ।
गण्डूषांबुनिषेचनं पुररिपोर्दिव्याभिषेचायते ।
किञ्चिद्भक्षितमांस शेषकबलं नव्योपहारायते ।
भक्तिकिन्दुकरोत्यहो वनचरे भक्तावतंसायते ॥

என்னுமிங்கிதர் சனங்களால் பக்தர்களிடத்தில் எத்தகைய தீயச்செயல்களிருப்பினும் அவைகளெல்லாம் நன்மைபயப்பனவாகவேயிருக்கின்றமையால், நற்செயலினால் நன்மை பெறுவார்களென்பது ஆச்சரியமன்று. இதனால் ஈசுவர பக்தர்கள் தம்மனம் போன வாறு நடக்கலாமென்பது அர்த்தமல்ல: பக்தர்கள் மன வாக்கு காய மென்னுந் திருகரணங்களைக் கடவுளிடத்திலர்ப்

பணஞ்செய்து விடுகின்றமையால், அவர்களிடத்து நிகழும் நற்செயலோ அல்லது தீச்செயலோ அவைகளைக், கடவுள் தன் செயலாக வகித்துக்கொள்ளுவதால், அச்செயல்கள் அவர்களைப் பற்றுவதில்லை. அந்தரங்க பக்தர்கள்

"நின்று மிருந்துங் கிடந்து நடந்து நினை
என்றுஞ் சிவன்றாளிணை."

"இருக்கினு நிற்கும்போது மிரவுகண்டுயிலும்போதும்
பொருக்கென நடக்கும்போதும் பொருந்தி யூண்டுபக்கும்போது
முருக்கிதழ்க்கனிவாயாரை முயங்கி நெஞ்சழியும்போதும்
திருக்களாவுடைய நம்பா சிந்தையுன்பாலதாமே."

"நீற்றைப் புனைந்தென்ன நீராடப் போயென்ன நீமனமே
மாற்றிப்பிறக்க வகையறிந்தாயில்லை மாமறைநூ
லேற்றிக்கிடக்கு மெழுகோடி மந்திரமென்ன கண்டா
யாற்றிற்கிடந்து துறைதெரியாமலலைகின்றையே."

என்றபடி, சதாத்யான பரர்களாய் மானஸபூஜை,
கடவுளின் திருவிளையாடல்களை யுணர்த்தும் சரித்திரங்களைப் படனம் பண்ணுதன் முதலிய செயல்களான் மனதுருகித் தாமே பக்தி பண்ணுவார்கள்.

புறத்தில் பக்தி செய்பவர்கள் தீர்த்த யாத்திரை, ஸ்தல யாத்திரை, தேவாலயசேவை, திருக்குளம், திருநந்தனவனம், திருப்பணி முதலியவைகளைச்செய்தலும்,

"நிலைபெருமா றெண்ணுதியே நெஞ்சே நீவா
நித்தலுமெம் பிரானுடைய கோயில்புக்குப்
புலர்வதன்முன் னலகிட்டு மெழுக்கு மிட்டுப்
பூமாலைப் புனைந்தேத்திப் புகழ்ந்து பாடித்
தலையாரக் கும்பிட்டுக் கூத்துமாடிச்
சங்கராசய போற்றிப் போற்றி யென்று
மலை புனல்சேர் செஞ்சடையெம் மாதீ யென்று
மாரூரா வென்றென்றே யலறு நில்லே."

"ஆடுகின்றிலை கூத்துடையான் கழற்கன் பிலையென்புருகிப்
பாடுகின்றிலை பதைப்பதுஞ் செய்கிலை பணிகிலை பாதமலர்
சூடுகின்றிலை சூட்டுகின்றதுமிலை துணையிலிபிணநெஞ்சே!
தேடுகின்றிலை தெருவுதோறலறிலை செய்வதொன்றறியேனே."

என்று சொல்லிக்கொண்டு தேவாலயங்களில் ஊழியஞ்செய்தலும், விக்கிரகங்களில் அர்ச்சித்தலுஞ்செய்வார்கள். அன்றியும், கடவுளடியார்கட்கு அனுக்கிரஹித்த சரித்திரங்களையும், அக்கடவுளை வழிபடுவதற்குரிய விதிநூ

ல்களையும், படித்தலும் பிரசங்கித்தலுஞ்செய்வார்கள்.

இவ்விருவித பக்திகளும் கடவுண்மாட்டு மெய்யன்புடையார்க்கு ஏற்றமுடையனவே. இதற்கு தாரணமாக பெரிய புராணத்தில் சொல்லப் பட்டிருப்பதென்னையெனின்:—

பூர்வகாலத்தில் சோழராஜனெருவன் சிவபக்தியில் மிகச்சிறந்தவனு ய், தன்னுடைய அளவிறந்த திரவியத்தைக்கொண்டு சிற்பநூல் விதிப்படி சி வாலய பிரதிஷ்டைபண்ணி, சோதிடர்களைக்கொண்டு கும்பாபிஷேகத்திற்கு ரிய நாளை வரையறை செய்துகொண்டிருக்குங்காலத்தில், அவ்வரசனது நக ரத்திலுள்ள ஓரிடைச்சிறுவன் மிகுந்த பக்தியினல் அரசனைப்போல் சிவால யபிரதிஷ்டை செய்வதற்குத்தகுந்த திரவியமில்லையே என்னுமேக்கத்துடன் தன் மனதிலேயே கெர்ப்பக்கிரகம், அர்த்தமண்டபம், மகாமண்டபம், யாகசா லை, பாகசாலை, நிருத்தமண்டபம், வாத்யமண்டபமுதலியவைகளையெல்லாம் வி மானகோபுரங்களுடன் மனேபாவனையினற்கட்டி, சோழராஜன் நிச்சயித்தி ருக்கின்ற கும்பாபிஷேகதினத்திலேயே தானுங்கும்பாபிஷேகம் பண்ணுவதா ய் உத்தேசித்திருந்தான். அச்சிறுவனது மெய்யன்பை உலகபிரசித்தி செய்யு ம் வண்ணம் கடவுள், சோழராஜனது ஸ்வப்நத்தில் தோன்றி, "அன்பனே! நீ நமக்குக்கும்பாபிஷேகஞ்செய்வதாய் உத்தேசித்திருக்கின்றதினத்தன்று, இ ந்நகரத்தில் வசிக்கின்ற இடைச்சிறுவன் தன்னற்கட்டப்பட்டிருக்கிற ஆலய த்தில் நமக்குக்கும்பாபிஷேகஞ்செய்யப்போவதால், அன்றையதினம் நாம் அ ங்கு வசிக்கப்போகிறேம்; உன்னுடைய கும்பாபிஷேகத்திற்கு வேறுதினம் பார்த்துக்கொள்ளக்கடவாய்," என்றுசொல்லி மறைந்தருளினர். உடனே சோழராஜன் கண்விழித்துத்தானுணர்ந்த ஸ்வப்நத்தைச் சிந்தித்து அதிக ஆச்சரியமுடையவனுய்ச் சிறுவனைத்தேடிச்சென்று, "நீர்கட்டியிருக்கின்ற கோயிலைக்காட்டவேண்டும்" என, அவன், தான் கட்டியிருக்கின்ற கோயி லின் வரலாற்றைச் சொல்ல, அவ்வன்பிற்கு மகிழ்ந்து குறித்த தினத்தில் அச்சிறுவன் கும்பாபிஷேகம் முடிந்தபின் பிறகு, மற்றெரு தினத்தில் சோ ழராஜனும் கும்பாபிஷேகத்தை முடித்து சிவானுக்கிரகத்திற்குப்பாத்திர னுனன் என்பதாம்.

ஆதலால் பக்தர்களுக்குக் கடவுள் அடிமைத்திறமுடையாரென்ப தை, "அடியார்க்கெளியன் சிற்றம்பலவன்." என்னும் வெண்பாவினுல் அறிய லாம். பக்தியென்னுமானந்தத்தில் மூழ்கினவர்கள் முக்தியை ஓர்பொருளா க மதியார்களென்பதை

"உத்திவாளராமுடித்த பால்வண்ணனேயுனது
பத்திவேண்டுவதன்றியே நரகிடைப்படினு
முத்திவேண்டிலேன் வேண்டிலேன் மூனிவர்

சித்திவேண்டிலேன் வேண்டிலேன் றிசாதிபர் பிறப்பே."

என் னுமிச்செய்யுள் உணர்த்துகின்றது. இத்தகைய பக்தியின் மேன்மையை பக்தர்களே யறிவதன்றி நம்மனோரால் அறிந்து சொல்லுந்தரமுடையதன்று.

சுபாஷணி.

(II Continued.)

சுபாஷணி:—ஸ்மிருதிகாரருக்கு எதிர்வாதம்பண்ணத்தகுந்த அறிவிலாதாரை இழிந்த ஜாதியாரென அனுஷ்டானத்தில் கொண்டுவர சாமர்த்தியமிருந்ததேயொழிய, எதிர்வாதம்பண்ணத்தகுந்தவர்களை, கலியுகத்தில் யாகஞ்செய்தலும் சந்நியாசாசிரமம் பெற்றுக்கொள்ளுதலும் கூடாதென்று ஸ்மிருதிகளில் சொல்லியிருந்தும் ஏன் அவ்வாறு அனுஷ்டானத்திற்குக் கொண்டுவர சாமர்த்தியமில்லாமற் போயிற்று? ஆதலால் உயர்ந்த வருணத்தார்கள் தங்கட்குச் சாதகமான காரியங்கள் ஸ்மிருதிக்கு விரோதமாயிருப்பினும் அனுஷ்டித்து வருகின்றார்கள் என்றால், அச்சாதகமான காரியங்களை ஸ்மிருதியிலும் விதிக்கப்பெறறால் பலமாகத்தான் பிடித்துக்கொள்ளுவார்கள் இதனால் தங்கள் நியாயவாதங்களை எடுத்துச்சொல்லத் திறமையில்லாத ஸ்திரீ சூத்திரர்கள் பின்னொருகாலத்தில் நூல்களைக்கற்றுக் கொள்வார்களாயின் தாங்களிழந்திருக்கின்ற தலைமையைக்கொடுக்கவேண்டுமென்று வழக்கிடுவார்களெனக்கருதி, அவர்கள் வேதார்த்தத்தைக்கேட்கலாமேதவிர வேதம்படிக்கலாகாதென்று சிலரும், புராண இதிஹாஸங்களைப் படிக்கலாமென்று சிலரும், அதுவும் சமஸ்கிருதத்தில் படிக்கலாகாது இதரபாஷைகளில் படிக்கலாமென்று சிலரும், அப்புராணாதிகளையுயர்ந்தோர்பால் கேட்டறியவேண்டுமேயன்றி கல்விப்பயிற்சி செய்யக்கூடாதென்று சிலரும் சொல்லிவருகின்றார்கள் ஸ்திரீகளாயினும்,சூத்திரர்களாயினும கல்விப்பயிற்சியிற்றேர்ந்து வித்வாம்ஸர்களாயிருப்பவர்களைக்கண்டால் பொறாமைகொண்டு, என்ன படித்தாலுமென்? ஸ்திரீகள்தானே! யென்றும், சூத்திரர்கள்தானே! என்றும் அவமதித்துக்கூறுவார்கள். அவ்வண்ணங்கூறுங்கூற்றானது, தமயந்தியின் சுவயம்வரத்திற்கு வந்த இந்திரன், ஆண்டு நளமகாராஜனைக்கண்டு அவனழகினால் சிறந்திருப்பதற்குப்பொறாமைகொண்டு,

'வடிவினிற் சிறந்தானேனு மானிடனலனோ வென்றான்'

என்றதுபோலிருக்கின்றது. இவ்வாறு சொல்லும் அவர்களுடைய தைரியமே தைரியம் ஆகும். உலகத்தில் மனிதர்கள் தங்களைப்போல சப்தார்த்தங்களையுணர்ந்து பேசக்கூடாத கிளிப்பிள்ளை நாகணவாய்ப்பறவைகட்கும் தா

ங்கள் பேசும் வார்த்தைகளைக்கற்பித்து, அவைகள் பேசுவதைக்கேட்டு சந்தோஷிப்பார்கள். கடவுளின் சிருஷ்டியினாலேயே சப்தங்களையு மர்த்தங்களையும் அறியத்தகுந்த கூர்மையான புத்தியினையுடைய ஸ்திரீ சூத்திரர்கள் படிக்கலாகாதென்று சொல்லியதைப்பார்க்கிலும் பொறாமைக்குணம் வேறென்னவிருக்கிறது? சமஸ்கிருதநீதிசாஸ்திரத்தில், 'நீண்டகொம்புள்ள எருதையும் கிரந்தம்படித்த சூத்திரனையும் கண்டால் விலகிப்போகவேண்டுமென்று உயர்ந்தவருணத்தாருக்கு புத்தி போதிக்கப்பட்டிருக்கிறது; அதன் தாற்பரியத்தை யோசிக்கும்பொழுது எருதானது மனுஷ்யனைப்பார்க்கிலும் பலம் அதிகமுள்ளது; அத்துடன் கூர்மையான நீண்ட கொம்புகளுமுடைத்தாயிருக்குமாயின் அதை சுவாதீனப்படுத்துவது கஷ்டம்; அதுபோல ஸ்திரீ சூத்திரர்களியற்கையாகவே கூர்மையானபுத்தியையுடையவர்கள்; அதோடு கூட கல்வியுங்கற்றால் அவர்களையுஞ் சுவாதீனப்படுத்தமுடியாது; ஆதலால் இவ்விருவரையும் பரித்யஜிக்கவேண்டுமென்று சொல்லியபடி. ஸ்திரீ சூத்திரர்கள் கூர்மையான புத்தியுள்ளவர்களென்பதற்குப்பிரமாணமென்னையெனின், அண்ணா! அந்நீதிசாஸ்திரத்திலேயே புருஷர்களைப்பார்க்கிலும் ஸ்திரீகளுக்குஆகார மிரண்டுபங்கென்றும்,புத்தி நான்கு பங்கென்றும்,சாகசம்ஆறுபங்கென்றும், காமமெட்டுபங்கென்றும சொல்லப்பட்டிருப்பது தான். ஸ்திரீ சூத்திரர்கள் வேதவாக்கியங்களை யுச்சரிக்கலாகாதெனின், வருணங்களையா, பதங்களையா, அல்லது வாக்கியங்களையா?— *வருணமுதலொன்று முச்சரிக்கலாகாதெனின், அவர்கள் ஊமையைப்போலல்லவா ஒன்றும் பேசாமலிருக்கவேண்டும்? சிவ விஷ்ணுவாதி தேவதைகளின் நாமங்கள் வேதத்தில் பிரயோகம் பண்ணப்பட்டவைகளா யிருக்கின்றமையால் அவைகளையுச்சரித்து ஸ்தோத்திரம் பண்ணுவதற்கும் அனர்கர்களாவார்கள். ஸ்திரீ சூத்திரர்களுக்குத்தெய்வமாவார் கொழுநர்களும், உயர்ந்தவருணத்தோர்களுமாகலின், பிறதெய்வங்களை வணங்கவேண்டியதவசியமின்றெனின்,முற்காலத்தில் தெய்வ வழிபாடு செய்து ஸ்திரீகளும்சூத்திரர்களுமுக்தியடைந்திருப்பதாய்க்கூறப்பட்டிருக்கின்ற கதைகளுக்கு நியாய மென்னை? அன்றியும், சூத்திரர்கட்கும் ஸ்திரீகட்கும் பிறப்பினால் தூய்மையின்மையால், வேதமோதுதற்கும், தெய்வவழிபாட்டிற்கும் தகுதியற்றவர்களெனின்,தூய்மையென்னப்படுவது,

"புறந்தூய்மைநீரானமையு மகந்தூய்மை
வாய்மையாற்காணப்படும்,"

என்றிருத்தலால்,அத்தூய்மைகள் யாவருக்கும் பொதுவாகயிருக்கின்றவைகளேயொழிய ஆண்பாலார்க்குமுயர்ந்த வருணத்தார்க்குமாத்திரம் சொந்தமன்று. அண்ணா! நான்சொல்லுவது அத்தூய்மையன்று. கெர்ப்பாதான முதலிய

---

* வருணமென்றால் அக்ஷரம், எழுத்து என்று பொருள்.

வேதமந்திரங்களைக்கொண்டு செய்கின்ற சம்ஸ்காரத்தால் எய்தப்படும் தூய்மையென்பையேல், அத்தகைய சம்ஸ்காரங்கள் உயர்ந்த வருணத்து ஸ்திரீகட்குஞ் செய்யப்பட்டிருக்கின்றமையின் அன்னோர்க்கு பிறப்பினாற்றூய்மையில்லையென் றெவ்வாறு சொல்லலாம்? உயர்ந்தவருணத்தார்கள் பிறப்பினாற்றூய்மையுடையாரென்றும், இழிந்த வருணத்தார்கள் பிறப்பினாற்றூய்மையில்லாதவர்களென்றும் எவ்வாறு உணரப்படுகிறது? வேதமந்திரங்களால் சம்ஸ்காரம் பெற்ற உயர்ந்த வருணத்தார்களுக்கும் அஃதில்லாத இழிந்த வருணத்தார்களுக்கும் அடையாளமென்னை? நற்குண நற்செயல்கள் உயர்ந்த வருணத்தாரிடத்துமாத்திரமாவிருக்கின்றது? இழிந்த வருணத்தாரிடத்தும் அவைகளுள; தீச்செயல்களுமவ்வாறே. உயர்ந்தவருணத்தார்கள் சம்ஸ்காரம பெற்றவர்களாதலால் அவர்களிற் சிலரிடத்தில் தீய குணங்களும் தீய செயல்களும் வந்தவாறென்னை? சம்ஸ்காரம் பெறாத மற்றவர்களில் சிலரிடம் நற்குண நற்செயல்களுமிருப்பதற்கு ஏதுவென்னை? காருடமந்திரத்தினால் பாம்புகடியுண்டவனுக்கு விஷசுத்தியாவதுபோல் வேதமந்திரங்களினால் சம்ஸ்கரிக்கப்பட்டவனுக்கு என்ன சுத்தியாயிற்று? பாரம்பரியமா யிழிந்த ஜாதியார்கள்பால் பிறந்தவர்களெல்லாம் இழிந்தவராகவும் உயர்ந்த வருணத்தோர்பால் பிறந்தவர்களெல்லாம் உயர்ந்தவராகவும் கொள்வதற்கிடமில்லை. ஏனெனின், தபஸே ஜாதியுயர்வையும், அஃதின்மையே ஜாதியிழிவையும் தருதலால்—. ஸ்திரீமூலம், நதிமூலம், ரிஷிமூலம் விசாரிக்கலாகாதென்பதெதனால்? உற்பத்திஸ்தானத்தில் நீசத்வமிருப்பதனாலன்றோ! அம்முனிவர்கள்பால் தபஸ் ஒன்றில்லாவிடில் எவ்வண்ணமுயர்வையடைவார்கள்? விசுவாமித்திரர் பிராமணரானதற்கும் அத்தபஸே! அரிச்சந்திர புராணத்தில் அரிச்சந்திரனை விசுவாமித்திரர் கோபித்த பொழுது அவர் சுவாஸத்தினின்றுமிரண்டு நீசஸ்திரீகள் பிறந்ததாகக் கூறப்பட்டிருக்கின்றது; கோபத்தையடைந்த விசுவாமித்திரர் நீசத்துவத்தையடையாமலிருக்க அவர்பா, லுதித்த பெண்களுக்குமாத்திரம நீசத்துவமெங்ஙனம வந்தது? பிறப்பினாலடையவேண்டிய நீசத்துவத்தை திரிசங்குமகாராஜன் இடையில் எவ்வாறடைந்தனன்? இவைகளைக்கூர்ந்து யோசிக்கும்பொழுது அவரவர்கள் செய்கையினாலேயே உயர்வுமிழிவுஞ்சித்திக்கிறதென்று வெளியாகிறது. ஜோதிஷ சாஸ்திரத்தில் நவக்கிரஹங்களையும், 'சித்தராரூடம்' என்னும் விஷ வைத்திய சாஸ்திரத்தில் சர்ப்பங்களையும், இரத்ந பரிக்ஷை சாஸ்திரத்தில் இரத்நங்களையும், அந்தணவணிக சூத்திர ஜாதிபேதங்களை அவைகளின் குணத்தினால் கண்டுபிடிக்கும்படி சொல்லப்பட்டிருக்கின்றன. அன்றியும் சங்கீத சாஸ்திரத்தில் இராகங்களை நால்வகைச்சாதியாகவும், யாப்பிலக்கணத்தில் நால்வகை பாக்களையும் நான்கு ஜாதிகளாகவும் குணங்களைப்பற்றியே பிரிக்

கப்பட்டிருக்கின்றன. அவ்வண்ணமிருக்க, மனிதர்களை மாத்திரம் குணத்தை விட்டுவிட்டு பிறப்பினால் பிரித்ததென்னை? பிறப்பினாலாவது ஆண் பெண்களுக்கு இலிங்க வேற்றுமை இருப்பதுபோல், உயர்ந்த வருணத்தாருக்கும் இழிந்த வருணத்தாருக்கும் அடையாள வேறுபாடிருக்கின்றனவா? மனிதர்களுடைய சக்தி, குணம், அறிவு இவைகளை எதிர்பாராமல் அவ்வேற்றுமையொன்று முணரப்படாத ஜாதியென்று ஒன்று ஏற்படுத்திக்கொண்டு 'கழுவுக்கேற்ற கோமுட்டி' என்றாற்போல விதி கூறினால் அவரை ஏன் பக்ஷபாதி என்று எண்ணக்கூடாது? இத்தகைய வாதங்கள் நிகழுமென்றன்றோ, அண்ணா! திருவள்ளுவ நாயனார் நூற்களிற் கூறிய ஜாதிகளுக்குரிய சிறப்பியல்புகளை யொழித்து பொதுவியல்பைமாத்திரம் தமது திருக்குறளில் கூறியுள்ளார். அதனாலன்றோ அவர் ஜீவகாருண்ய முடையாரென யாவராலும் புகழப்படுகின்றார்.'

பிரியதரிசனன்:—'நங்காய் சுபாஷிணி! திருவள்ளுவநாயனார் மிகுந்தயுக்திசாலி. எல்லாஜாதியாருக்கும் ஒற்றுமையான விதிகளைமாத்திரமா கூறியிருக்கின்றார்? எல்லாச்சமயத்தார்கட்கும ஒற்றுமையாகவே 'எமமவர் எமமவர்' என்னும்படி கூறியிருக்கின்றனராதலால்—.'

சுபாஷணி:—'அறநூலார் ஜீவகாருண்ய முடையராய் இருந்தாற்றானென்னை? இல்லாமற்போயினாற்றானென்னை? உலகத்தில் மக்கட்பிறப்பினையடைந்தவர்கள் விதிகளை முன்னிட்டுக்கொண்டு பிராணிகளை வருத்தாமல் ஜீவகாருண்யமுடையராயிருத்தல் வேண்டுமென்பதெனது நோக்கம். இது தான் திருவள்ளுவநாயனாரது கருத்தென்பது, சிறப்பொழுக்கத்தினையும், வழக்குதண்டத்தினையும், அவர் கூறாமையினாலறியப்படுகின்றது. இது காறும நான் உன்னிடமெதற்காக வாதமபண்ணினேனென்றால், நீயிந்நகரத்திற்கு விளவரசனாகப்போகின்றமையால் தருமசாஸ்திரங்களின் தாற்பரியங்களை நன்குணர்ந்துகொள்ள வேண்டுவதுமன்றி ஜீவகாருண்யமெல்லாருக்குமியல்பாகவிருக்கவேண்டிய குணமாயிருப்பினும, அரசனுக்கு அக்குணமுக்கியமாகவிருக்கவேண்டுவது சிக்ஷரக்ஷணைகளைப்பண்ணவேண்டுமாகையால்; பெரியபுராணத்தில் திருவாரூர்ச்சிறப்பென்னும் பகுதியில் சொல்லப்பட்டிருக்கிற மனுநீதிசண்டசோழன் ஜீவகாருண்யமுடையவனாய் அரசாண்டமையால், தன்மகனுக்குப்பசுவின் கன்றின் கொலைசம்பவித்ததற்கு அந்தணர்கள் தருமநூலிற்கூறிய பிராயச்சித்தவிதிகளை எடுத்துக்கூறியும், அதனைப்பெற்றுக்கொள்ளாமல் அதற்குப்பதிலாகத்தன் மகனையுங்கொன்று தானுமுயிரைவிடச்சம்மதித்தான். அவன் பாற்ஜீவகாருண்யமில்லாவிடின், அந்தணர்சொல்லியவண்ணம் பிராயச்சித்தஞ்செய்துவிட்டுச்சீராட்டிக்கொண்டன்றோ சுகித்திருப்பான்?'

பிரியதரிசனன்:—'சுபாஷணி! நின்னுடையவாக்சாதுர்யத்தையும், கல்வித்திறமையையும் இன்றுதான் கண்டேன். இதற்குமுன்னிவ்வாறு பேச ஒருநாளுங்கேட்டிலேன்! நீ கூறிய சொற்கள் யாவும் அமிருதவருஷத்தைப் போலெனக்கு ஆநந்தத்தை விளைக்கின்றனவாதலால், உன்னோடுசோர்வில்லாமல் பேசுவதற்கு எனக்கு மிகவுமுற்சாகமுண்டாகிறது.

"கண்ணோட்டத்துள்ள துலகியலஃதிலா
ருண்மை நிலக்குப்பொறை."

"கண்ணிற்கணிகலங்கண்ணோட்டமஃதின்றேற்
புண்ணென்றுணரப்படும்."

என்றபடி தாக்ஷண்யமில்லாதவரசன் உலகத்தையாளுதற்குத்தகுதியுடையவனாகமாட்டான்; என்றிருந்தாலும்.

"எவ்வதுறைவ துலகமுலகத்தோ
டவ்வதுறைவதறிவு,"

என்று நாயனார் சொல்லியிருப்பதால், பாரம்பரிமாய் உலகவழக்கமெப்படியிருக்கின்றதோ அவ்வண்ணநடப்பதுதான் நமக்குத்தகுதி; அது தவறி, உசிதாநுசிதத்தைப்பார்த்து நடந்தால் உலகத்தாரால் பழிக்கப்படுவோம்.'

சுபாஷனி;—அண்ணா! நீ சொல்லியது சரியே; உலகவிரோதமாய் நாம நடந்துவரவேண்டுமென்று நான் சொல்ல வரவில்லை; இன்னது இன்னபடி இருக்கவேண்டுவது என்றறிந்து உலகத்தார்க்கொப்ப நடப்பதே கடமை என்பதை

"எப்பொருளெத்தன்மைத்தாயினுமப்பொருள்
மெய்ப்பொருள் காண்பதறிவு,"

என்பதனாலுணரவேண்டும். உலகத்திலிருக்கிற ஜநங்களையும் நல்லவர் தீயவர் என்பதை,

"களைகொடிது யாழ்கோடு செவ்விதாங்கன்ன
வினைபடு பாலாற் கொளல்,"

என்றவண்ணம் பிறப்புமுதவியவற்றால் கொள்ளாமல் செய்கையாலேயே அறியவேண்டியது.

பிரியதரிசனன்:—'நங்காய்! நீ சொல்லியது சரியே. இந்த வியவகாரமின்றைக்கிவ்வளவிற் நிற்கட்டும். நீ கற்றிருக்கின்ற கற்பிலக்கணத்தைப் பற்றி சிறிது பேசவேண்டுமென்னுமாசை எனக்குண்டாகிறது அதைப்பற்றிக்கொஞ்சம் பேசுவோம்.'

சுபாஷணி:—'அண்ணா! நீ வருவதற்குமுன்னமேயே அதைப்பற்றிப்

பேசுவதற்கு, நீ வரவில்லையே என்று காத்துக்கொண்டிருந்தேன். நீவந்து ம ஸ்மிருதியைப்பற்றிய வார்த்தை நடுவில் வந்துவிட்டமையால் இதுவரை யில் வீண்வியவகாரமாய்ப்போயிற்று. இப்பொழுது நீயேஞாபகப்படுத்தி னமையால் கற்பிலக்கணத்தைப்பற்றிச்சிறிதுநேரம் வேடிக்கையாய்ப்பேசிக் கொண்டிருக்கலாம்.

டி. பி. விசுவநாத பிள்ளை.

பக்ஷபாதமும் பிராதுருதுரோகமும்
அல்லது
பிறமாதர் நட்பினாலுண்டாகுநிந்தை.

II

அவ்வாறு சென்ற இரங்கசாமி ஸ்ரீனிவாஸனை நோக்கி, "அப்பா சீமா!" எனவே, அவன் திரும்பிப்பார்த்து, (தனக்குள்ளே) "இவன் குறைப்போதுக்குங் கொட்டை நூற்கவந்துவிட்டானே!எனக்கோநாழிகையாய்விட்டதே! இவனகத்துவியவகாரமோ இப்பொழுது ஒழிவதாயிராதே! அதைப்பற்றித்தான் ஏதோ சொல்லவருவதாய்க் காணப்படுகிறது." என்று, "அப்பா, இரங்கசாமி! என்ன விசேஷம்? சுருக்கமாய் இரண்டு வார்த்தை சொல்லு, நாழிகையாய்விட்டது, இராமாயணம் பாராயணம் பண்ணவேண்டும்;" என்றான்.

இரங்கசாமி:—"ஆனல்சரி, நீ இராமாயண படனம் பண்ணு, நான் கேட்டுக்கொண்டிருக்கிறேன். நான் உன்னுடன் சிலவிஷயங்களைப்பற்றிப்பேசவேண்டும்; உனக்கெப்போது சாவகாசமோ, அப்போது பார்த்துக்கொள்ளலாம். இன்று எந்த சந்தர்ப்பம் பாராயணம் பண்ணப்போகிறாய்?"

ஸ்ரீனிவாசன்:—"பதினாலாயிரம் வெண்கலஇரதர்களுடன் கூடிய கரதூஷண திருசிரஸ்என்னு மிகவும் பராக்கிரமசாலிகளான இராக்கதர்களிடம்போய் சூர்ப்பனகையானவள் பஞ்சவடிசென்று இராமலக்ஷ்மணர்களால் கர்ணநாஸிகாச்சேதனம் பண்ணப்பட்டு தான் விரூபப்பட்ட சகல விருத்தாந்தத்தையும் சொல்லிக்கலகமூட்டுகிற இடம், கெவனமாய்க்கேள்;" என்று பூர்வாங்கபூஜை முதலியதைக் கிரமமாய்ச் செய்து, பகவத்யானஞ்செய்துக்கொண்டு பூர்வபீடிகையாயுள்ள விநாயகர், சரஸ்வதி, ஆஞ்சநேயர் முதலியோர்களைஸ்தோத்திரம் பண்ணி, இராமஷடக்ஷரீஜபஞ்செய்து, பின்பு பாராயணஞ்செய்து முடித்தான். அப்பொழுது இரங்கசாமி, "ஸ்ரீனிவாஸா! பார்!இந்த இராக்ஷஸியானவள் துர்க்குணமுடையவளாய்ப்பஞ்சவடி தீரத்திற்குவந்து இராமலக்ஷ்மணர்களைக்கண்டாசையுறவும், அக்குற்றத்திற்காக அவர்களிவளை விரூபமாகச்செய்யவும், அவள்போய் தன் பிராதாக்களான கர, தூஷண, திருசிரசுக்களிட முறையிட்டுக் கலகமூட்டவும், அவர்கள் கோபமூண்டு சண்டைக்கு வந்து மடியவும், இராவணன் சகுடும்ப பரிவாரத்துடன் மரணத்தையடையவும் காரணமாகவிருந்தது அவளுடைய கெட்ட சுவபாவமல்லவா? ஒருஸ்திரீயினிமித்தம் இராக்ஷஸப்பூண்டென்பதில்லாமல் இராவணன் கெட்டழிந்தான்," என்றான்.

ஸ்ரீனிவாஸன்:—"தத்வம் வேறு. சூர்ப்பனகையானவள் கலகமூட்டாவிடில், இராவணனழியக்காரணமில்லை. கைகேயியானவள் பரதனைக்காட்டிலும் இராமனிடம் அதிகப்பிரியம் வைத்திருந்ததாய்ச் சொல்லப்படுகிறதே; அப்படியிருந்தும் கடைசியில் தன் வேலைக்காரியான மந்தரை (கூனி) யினுல் போதிக்கப்பட்டு, 'கலைப்பாற் கலைத்தால் கல்லுங்கரையு' மென்ற பழமொழிப்படி கெடுமதிகொண்டு இராமனைக்கானகமேகவிடுத்தனள். தான் சௌக்யப்பட்டாளா? இல்லை. பர்த்தாவையிழந்தும், வைதவ்யத்தையடைந்தும், புத்திரனுடைய அப்பிரியத்திற்குப்பாத்திரமாகியும், ஜனங்களுடைய நிந்தையையேற்றும் துன்பமுறுபவளாயினுள்; இவ்வளவிற்கும் இராமனுக்குத்தன் சிற்றன்னையினிடம் பிரியம்தான்; ஏன்? தான்கானகமேகாவிடில் இராவணன் மடிவதும், தேவகாரியமுடிவதும், தன்னவதாரமகிமையை உலகத்தோருணர்வதுந்தானெப்படி? மந்தரைகலகஞ்செய்யாவிடில் இராவணாதிகளை சம்ஹரிக்க அவதரித்த ஸ்ரீராமன், பட்டாபிஷேகஞ்செய்துகொண்டு அரசாட்சிசெய்யவல்லவா நேரிடும்? நேரிடின், அச்செய்கையானது ஓடுவதற்கு மருந்துண்டவன் உறங்குவது போலாகுமல்லவா? இன்னுமாராய்ந்தறியப்புகின் எவ்வளவோவிருக்கிறது; அவைகளெல்லாமிருக்கட்டும், தருமமிகுந்த அக்காலத்திலேயே தசரதனுடைய குடும்பகலகத்துக்குக்கூனியும் இராவணன் குலமழிய சூர்ப்பனகையுமேற்பட்டார்களல்லவா?"

இரங்க:—"அப்பா! கூனியும் சூர்ப்பனகையுமெப்படி இக்ஷ்வாகுகுலதிலகனை தசரதனுக்கும், பௌலஸ்தியவம்சோத்பவனை இராவணனுக்கும் ஏற்பட்டார்களோ அப்படியே எங்கள் குலத்திற்கும் எங்கள் சிறுதாயார் ஏற்பட்டிருக்கிறாள்."

ஸ்ரீனி:—"நன்றாய்ச்சொன்னாய்! எங்கள் மாதாமகவம்ச மடியோடழியவும் ஒருவளேற்பட்டாளன்றோ"!

'கூற்றமே இல்லிற்கிசைந்தொழுகாப்பெண்.'

'நன் மனைதோறும் பெண்களைப்படைத்து நமனையென் செயப்படைத்தனையோ,' எனவு மேலோர்கள் கூறுவதாலும், 'செய்ய கிரேதத்திலிரேணுகையே கூற்றுவனும்,' என்னும் நீதிவெண்பாவில் 'முதல் யுகத்தில் இரேணுகையும், இரண்டாவது யுகத்தில் சீதாதேவியும், மூன்றாவது யுகத்தில் துரௌபதியுமாகிய ஒவ்வொரு பெண்களே எமனாயிருந்தார்களென்றும், நான்காவதாகிய இக்கலியுகத்தில் வீடுகள்தோறும் ஒவ்வொரு பெண்களும் எமனாகவிருக்கிறார்கள்' என்று சொல்லப்பட்டிருப்பதாலும் பெண்களே கலகத்திற் காஸ்பதமானவர்களென்பது பரிஷ்காரமாய்த் தெரிகின்றது. இருந்தாலு முங்கள் வகுப்பினருண்டோ யில்லையோ, சுத்த எருமை மாட்டு ஜன்மங்களப்பா! குரும்பாடுகள் மாதிரிதான்! ஆனால் நீ மாத்திரம் சுகவாஸியே! மாமியார் வீட்டோடே ஒரு விசாரமுமில்லாதிருக்கிறாய்; அவர்களாலுனக்கு விடப்பட்டிருக்கிற பங்கு மனை நஞ்சை வகையறாக்களே சுமார் பதினாயிரம் பொறுமே! அதுவும் போதாமலிங்கும் பங்கு விட்டபாடில்லை; நீ யிருந்தாலும் தந்திரசாலியே!"

இரங்கசாமி:—"என்னப்பா பண்ணச்சொல்லுகிறாய்! மாமியார் வீட்டில் ஆயிரமாதரித்தாலும் நம்பிதுரார்ஜிதமாயுள்ள சொத்தை விடலாமோ! இதில் ஆள் ஒன்றுக்கு சுமார் 5000-ரூபாய் பொறும்படியான பூமியைப் பிரித்துக்கொண்டிருக்

கிறோம். கடனோ ஆள் ஒன்றுக்கு 2500-ரூபாய் வரையில் ஆகிறது; மாதாபிதாக்களுக்கு வைத்திருக்கும் சொத்தில் யாதொருகடனும் கிடையாது; வாயிதாமுதலிய செலவுகள் போக அவர்கள் சாப்பாட்டுக்குப் புஷ்டியாய் வைத்திருக்கிறோம், அம்மாவுக்கு ஸ்ரீதனம் வேறு இருக்கிறது. பௌரோகிதத்தைத்தான் அண்ணாவும் சித்தப்பாவும் குஞ்சப்பாவும் வருஷமொவ்வொருவராய்ப் பிரித்துக்கொண்டிருக்கிறார்களே! எங்கள் பிதாவுக்குள்ள ஒருவருஷ வரும்படியில்தானப்பா சுந்தரமும் இராமனாதனு மடையவேண்டுமென்று நான் சொல்லுகிறேன்; மைத்தபேர்களான எங்களுக்கு அதில் யாதொரு பாத்தியமுமில்லை. அண்ணாவுக்கோ சகலமும் இராமனாதனடையவேண்டுமென்கிறவெண்ணம். இது இப்படியிருக்கட்டும், நான்தான் திருமலைராயன்பட்டணத்தில் சில வருஷகாலம் பள்ளிக்கூடம் வைத்துக்கொண்டிருந்தேனே, அப்போது ஈசுவரனிருக்கிறானே, என் இளைய சகோதரன், சுந்தரத்துக்குமடுத்தவன், அவனை யிட்டுக்கொண்டுவந்து கீர்வாண பாஷையில் அவனுக்குப்பயிற்சி ஜாஸ்தியிருந்தாலும் ஆங்கிலபாஷையிலும் பயிற்சியுள்ளவனாய்ச்செய்ய உத்தேசித்து லோயர்சகண்டெரி பரிக்ஷையும் தேறும்படிச்செய்து அவன் விஷயத்திலதிகப் பிரயாசைப்பட்டு, கிராமஅதிகாரத்வமான இரண்டொரு வேலையும் பண்ணிக்கொடுத்தேன்; 'வளர்த்த கிடா மார்பில் பாய்ந்தவாறு' என்னையே அங்கிருக்கவொட்டாமல் துறத்திவிட்டான். அவற்றையும் சகித்துக்கொண்டு திரும்ப மன்னார்குடியே போய்ச்சேர்ந்தேன். எனக்கென்ன குறைந்துபோயிற்று? ஈசுவரனுமிப்போ வியாபகனாக யிருப்பதாகவுங்கேழ்வி. எப்படியாவது நன்றாயிருந்தால் சரி."

ஸ்ரீநி:—"இக்காலத்தில் தாய்தந்தை அண்ணன்தம்பிஎன்ற மரியாதையும் ஒற்றுமையும் உண்டாவதில்லை"

'பருத்திப் பொதியினைப் போலே வயிறு பருக்கத்தங்கள்
துருத்திக் கறுசுவை போடுகின்றார்,'

என்றபடி, எல்லாம் தன் வயிறு நிறம்பினால் சரிதான். பிறர் என்னவானால் என்ன? சரி, நாழிகையாகிறதே, நான் போஜனத்திற்குப் போகிறேன்."

இரங்கசாமி:—"சீமா! முக்கியமாய் உன்னிடம் பேசவந்ததைவிட்டு விட்டு வேறு விஷயங்களைப்பேசும்படி நேரிட்டது,"

ஸ்ரீநிவாஸன்:—"அதென்ன?"

இரங்கசாமி:—"எங்கள் சித்தப்பா நாகாசாஸ்திரிகள் தன் சம்சாரத்தின் (எங்கள் சித்தியின்) தலையணை மந்தர உபதேசத்தினால் எப்படியாவது தான் ஏகபோகமாய் இந்த ஊர்முதலான பௌரோகிதத்தையடைய சில சூட்சிகள் செய்வதாய்க்கேழ்விப்படுகிறேன்! குஞ்சப்பாவும் இராமாயணமே கதியென கோயம்புத்தூருக்குப்போய்விட்டனர், அவரிருந்தாலுமிவர் பாஜா நடவாது; அதைப்பற்றித்தான் உன்னிடம் பிரஸ்தாபிக்க இங்குவந்தேன்"

ஸ்ரீநி:—"அப்பா! நாழிகையாய்விட்டது, இராத்திரி பேசிக்கொள்ளலாமே; ஒருக்கால்நிலவுச்சாப்பாடு நம்மமாடியில் இன்றிரவு நடக்கும்போலிருக்கிறது. சொல்லியனுப்புகிறேன் வரவேண்டும்."

இரங்க;—"அப்படியே; இராத்திரி வந்து பேசிக்கொள்கிறேன்." என்று தன் பிதுருக்கிரகத்திற்குச்சென்றான்.

அப்பொழுது 'டிங்கு' 'டிங்கு' என்று மணி பதினொன்றடித்தது. ஸ்ரீநிவாசன் தன்னில்லாளான கமலாம்பாளைக்கூவி, இலைபோடும்படி சொல்லிவிட்டு, தான் மாத்தியானிகம் பண்ணிக்கொண்டிருந்தான். அப்போது சுந்தரம், கையில் சில கடைச்சாமான்களுடன் அவ்விடம் வந்து, "சீமா! மத்தியானம் எங்ககத்திலே தான் நீ போஜனஞ்செய்யவேண்டும்." என்றான்.

ஸ்ரீநி:—"அப்பா சுந்தரம்! உன்னகத்தில் என்ன விசேஷம்?"

சுந்த:—"என் தமையன் இரங்கசாமிக்கு விருந்துசெய்வதால் நீயும் வரவேணுமென்றுதான்—"

ஸ்ரீநி:—"இன்றென்னால் வரமுடியாதப்பா! இப்போதே மணிபதினொன்றாய் விட்டதே! கச்சேரிக்குப்போக வேண்டாமா?"

சுந்த:—"வாஸ்தவ்யந்தான், நீயுன்காரியமாய் வராமல் போனாலும், அவள் என் பேரில் கோபஞ்செய்வாளே, நான் உன்னை நன்றாயுபசரித்தழைக்கவில்லை என்று."

ஸ்ரீநி:—"அடிகமலா! இலையைப்போட்டி, நாழிகையாய்விட்டதே!"

சுந்த:—"ஏன் அப்பா! நான் சொல்லிக்கொண்டிருக்கையிலேயே, நீயுன் காரியத்தைப்பார்க்கிறாயே!"

ஸ்ரீநிவாஸன்:—"நீ என்ன பண்ணச்சொல்லுகிறாய்? நான் சிக்கிரம் போகவேணும். இன்றிரவில் நிலவுச்சாப்பாடு ஏற்பாடுசெய்திருக்கிறேன். சுமார் 40. 50 பேர்கள் வரையில் போஜனத்திற்கு வருவார்கள். முக்கியமாய் நம்ம சாயரை வரும்படி சொல்லியிருக்கிறேன். (ஸீகஸ்டம் ஆபீசில் [Sea Custom Office] 'சாயர்' என்றும், 'சௌகிதார்' என்றும் இருவரை கெவரன்மெண்டில் நியமனஞ்செய்திருக்கிறார்கள். அவர்களில் சாயருக்கு ரூபாய் இருநூற்றைம்பது சம்பளம். அவர், இங்கிலீஷ் இலாகாவிலிருந்து பிரயாணிகளாலாகிலும் அல்லது கப்பல்களிலிருந்து இறக்குமதியாகு மூட்டைகளிலாகிலும், வரும் அபின், சாராயம், புதுத்துணி முதலிய குறிப்பிட்ட சில சாமான்களைப்பரிசோதித்து, முத்திரை குத்தி, பிரன்சு இலாகாவிற்குள் விடுவதுமான வேலைசெய்பவர்; அவருக்குக்கீழ் மானேஜ்மெண்டு செய்பவர்தான் சௌகிதார்' என்பவர். அவரை ஸீகஸ்டம் ஆபீஸ் மானேஜர் (Sea Custom Office Manager) என்றுஞ் சொல்லுவது வழக்கந்தான். அவருக்கு ரூபாய் அறுபதுமுதல் நூற்றைம்பது வரையிலும்சம்பளமுண்டு, அவருக்குங்கீழ் அனேகம்பேர்கள் உத்தியோகஸ்தர்களிருக்கிறார்கள். இக்கதாநாயகனான ஸ்ரீநிவாஸய்யர் 'சௌகிதார்' வேலையைப்பார்த்து வருகிறார். கடைசிக்ரேட் சம்பளம் ரூபாய் அறுபது.) இன்னுஞ்சில முக்கியமான குமாஸ்தாக்களும் வரலாம். இந்தவூர் தாசிஇராஜத்தைப் பாடும்படிக்கும், நம்ம குட்டிகளை 'அச்சோபொங்க' தட்டும்படிக்கும் ஏற்பாடு செய்யலாமென்றெண்ணியிருக்கிறேன். நீதான் வந்தெல்லாவித ஜாக்கிரதையுஞ்செய்யவேண்டும். இலக்ஷிமிதான் சமையல், கமலா வந்தழைப்பள் அவளை, நானும் சீக்கிரம் கச்சேரிக்குப்போய் சில முக்கிய காரியங்களைப்பார்த்துவிட்டு மூன்று மூன்றரைமணிக்கெல்லாம் வரவேண்டுமென்றிருக்கிறேன்."

சுந்தரம்:—"அப்பா சீமா! அதெல்லாமிருக்கட்டும் நீ எது செய்தாலுஞ்செய், நீ இப்போது வராவிட்டால் அவளுக்கு திருப்திகரப்படாது. நீ வந்து நேரில் உன் சௌகர்யத்தை அவளிடம் சொல்லிவிடு, என் பளுவு விட்டது."

ஸ்ரீநி:—இவ்வளவு பரிவாக என்னையழைக்கவந்தாயே! அதற்கே நான் வர வேண்டியதுதான்.

சுந்தர:—"நீ என்னைக் கோபித்துக்கொள்ளவேண்டாம். என்னகமுடையாளும் உன்னையழைப்பதில் பிரியமுடையவளாயிருக்கிறுளென்பதை குறிப்பித்ததே தவிர வேறில்லை."

ஸ்ரீநி:—"சரி, நீபோய் நான் மூன்றுமணிக்கு 'டிபன்' சாப்பிட வருவதாய்ச் சொல்லு. என்னை இப்போது விட்டு விடு.

சுந்தர:—"அதெல்லாமாட்டேன். நீ வந்துதான் ஆகவேண்டும்."

இவர்களிவ்வாறு வாக்குவாதம் பண்ணிக்கொண்டிருக்கையில், லக்ஷுமி, ஏதோ காரியமாய் சரேலென்றங்கு வந்தவள் பட்டகசாலைக்குள் போய் கமலம்பாளுடன் சில வார்த்தைகள் பேசிவிட்டுக்கையில் ஏதோ சாமான் எடுத்துக்கொண்டு, இவர்களிருக்குமிடம் வந்து (புன்சிரிப்புடன் பரிகாஸமாய்) "கடைக்குப்போனவித் தருவாயென்ன? சமயாசமயந்தெரியாத புருஷாளோடு பழகுகிறது மெத்த பிரயாசமடியம்மா! சீமா கச்சேரிக்குப் போகப்பட்டவன், சீக்கிரமாகவேணுமென்று நான் படிச்சுப்படிச்சு சொல்லியிருந்தும், வம்பு வளர்த்துக்கொண்டு ஊர் சுத்திவிட்டு இங்கே மணையில் சாய்ந்துகொண்டிருந்தால் எல்லா காரியமுமாய்விடும்; "சீமா! உனக்கு இராமாயணம் வாசிக்கவேண்டாமா? ஆபீசுக்குப்போகவேண்டாமா? இவாளோடு வம்பாடிக்கொண்டிருக்கிருயே; சீக்கிரம் வா; நம்மகத்திற்கு போஜனஞ்செய்ய; கமலாம்பாளை அழைத்துக்கொண்டு போகிறேன்." என்று கமலாம்பாளையுமப்போதே தன்கூட அழைத்துக்கொண்டு சென்றுள்.

ஸ்ரீநிவாஸன் உடனே பட்டகசாலைக்குள் நுழைந்து பார்க்கும்போது தன்னகத்தில் சமையலானதாய்க்காணப்படவில்லை. 'சரி, எல்லாவற்றிற்கும் கமலாவும் லக்ஷுமியுமொன்று; இருந்தாலும் எனக்கு முந்தி தகவல் சொல்லியிருக்கப்படாதா? இது வேடிக்கையாகத்தானிருக்கிறது, நாழிகையோ ஆய்விட்டது, மணி பனிரெண்டுமடிக்கிறுன், இனி கசசேரிசென்றுல் அபராதம் விழுவது சித்தம்; சாயருக்கு விடைச்சீட்டனுப்பிப்போடலாம். இலக்ஷுமிக்குத்தான் மனக்குறை எதற்கு? "அப்பா சுந்தரம்! நான் வருகிறேன் போய் சீக்கிரப்படுத்து. 'கஞ்சிவரதப்பா என்றுல் எங்குவரதப்பா' வென்று கேட்பவரைப்போல்என்னை சுத்தச்சாப்பாட்டு இராமனுக எண்ணிக்கொண்டார்கள், இருவரில் யாராவது என்னிடஞ்சொல்ல வேண்டாமோ! நீதான் காலமேயே சொல்லலாகாதோடா?"

சுந்த:—"எனக்குத்தெரியாதப்பா! இன்று விருந்தே அவள்ஏற்பாடு; நான் பேரளத்திலிருந்து பத்து நாழிகைக்குத்தானே வந்தேன், இப்போதுதான் தெரிந்தது, அழைக்க வந்தேன்."

பிறகு ஸ்ரீநிவாஸன் தன் வீட்டு வேலைக்காரனிடம் விடைச்சீட்டொன்று எழுதிக்கொடுத்துத்தன் ஆபீசுக்கு அனுப்பிவிட்டு, அரையிலுடுத்திய நார்மடியும், ஈரத்துவால்துண்டு மேற்போர்வையுமுடையவனுய் கையில் வெண்கலகூஜாச்சொம்பை எடுத்துக்கொண்டு சுந்தரத்துடன் போஜனத்திற்குச்சென்றுன்.

இக்கதையை வாசிப்பவர்கட்கு, சுந்தரம் லக்ஷுமிஇருவரையும் கொழுனனுமனைவியுமென விளங்குமாதலால், ஸ்ரீனிவாஸனுக்கும் இலக்ஷுமிக்கும் உள்ள

அன்புடைமையைப்பற்றிமட்டும் இங்கு தெரிவிக்கவேண்டியதவசியமாகவிருக்கின்றது. இலக்ஷ்மியின் பிதாமகி, ஸ்ரீநிவாஸனுடைய மாதாமகிக்குத்தங்கையாதலால், இலக்ஷ்மியானவள் தந்தை வசிக்குமக்கிரகாரக்கொந்தகையினின்றும் திருநள்ளாற்றில் பெரியபாட்டியார் கிரகத்திற்கு அடிக்கடி கல்யாணமுதலிய விசேஷகாலங்களிலும், கல்விப்பயிற்சியின்பொருட்டு மூத்தசகோதரனாகிய நாராயணனுடனும்,பெரியபாட்டியார் மகன் வயிற்றுப்பேரனாகிய இந்த ஸ்ரீநிவாஸனுடனும் கும்பகோணத்திலும் வசித்ததால், இவ்விருவர்கட்கும் ஐந்து வயதுக்கு மேற்பட்ட குழந்தைப்பருவமுதல் விளையாடுதலும், ஒருவருக்கொருவர் வித்தியாப்பியாசத்தில் தங்கள் பாடங்களை அடிக்கடி பரிக்ஷைசெய்தலும் ஆகிய நட்பினால் இவர்கட்கு விவாகமுடிந்தபின்பும், ஒரேஸ்தலத்தில் வசிப்பவர்களாதலால் இளமைப்பருவத்தில் பயின்ற அந்நட்பு இற்றையவரையும் பிரிவுபடாமல் வளர்ந்தோங்குததற்குக்காரணமாகவிருந்தது.

III

"அடி நானென்ன செய்வேன், சமையலாகி என்னேரமாயிற்று; மச்சினனைக்காணோம், அவரையழைக்கப்போன இவளையுங்காணோம்; ஒற்படி மன்னார்குடியாளாவது வரப்படாதோடி! அவளையுங்காணோமே; ஸ்ரீநிவாசன் தன்கூடவந்ததாய்ச்சொன்னரே, அவனும் வரக்காணோமே! அவனின்றைக்கு கச்சேரிக்கு போகவேண்டாமோ? பத்துமணிக்கெல்லாமில்லை போடாவிட்டால் குதி குதியென்று குதிப்பானே, மணியா ஒன்றடிக்கப்போகிறதே! இன்றிரவில் நிலாச்சாப்பாடு வேறே எற்பாடு செய்திருக்கிறான் சீமா; சுருக்க வந்தாலல்லவோ இரா விருந்துக்குச் சௌக்கியமாயிருக்கும். இராத்திரி எற்பாடு எனக்கு முன்னமே தெரிந்திருந்தால் இந்த விருந்தை இன்றைக்கு வைத்துக்கொள்ளவேண்டாம் அம்மா! யோசனையில்லாமல் திடீரென யாரிடமுஞ்சொல்லாமல் ஒரு காரியத்தை எத்தனம்பண்ணினலென்ன செய்கிறது? இப்படித்தான் பார்த்துக்கொள் நம்ம சீமாகாரியமெல்லாம்; சொல்லப்போனால் கோபமோ தடபிடலாய் வந்துவிடும். எல்லாவற்றிற்கும் முன்பின்யோசனைவேண்டாமோ? வாசித்து உத்தியோகம் பண்ணினலாச்சுதா? இன்றிரவு நிலாச்சாப்பாடு என்ன வந்தது? நீ என்னுடனிப்போதுசொல்லத்தானேண்டி தெரியும்! இவன் சம்பாதிக்கிற காசியெல்லாமிப்படித் தானழிக்கிறான் பார்த்துக்கொள்; என்ன சத்விஷயமெடுபட்டுப்போகிறது? 40-50 பேர் என்னத் திற்குக்கூட்டம்? ஏதோ ஆசையாயிருந்தால் முக்கியமாய் நமக்கு வேணுமென்கிறவர்களாயிரண்டொருவருக்குச்சொன்னாற்போதாதா? சாதுக்களான வேதமோதிய அந்தணர்கட்கு அன்னம் படைத்தால் போகும் வழிக்காவது சார்த்தகமுண்டு, இப்படி டம்பாசாரி மாதிரி திரியும் புத்திபோய் எப்போதுதான் நல்லபுத்தி வருமோ கண்ணுசீமாவுக்கு; ஏ, பிராணம்பிகே!" என்று லக்ஷ்மி சொல்ல, கமலாம்பாள், "நிலாச் சாப்பாடு மாத்திரமா? அக்கா! இராஜம்பாடப்போகிறாளாம்" என, லக்ஷ்மி, "அடி! அவன் எனக்குப் புத்தி சொல்லுகிறானேயொழியத் தான் செய்யுங் காரியங்களைத்தீர யோசியாமல் செய்கிறானே! என்னைவிட வயதிலும் ஐந்து வருஷம் பெரியவன்தான் எங்கத்தான்; கல்வியுங்கற்றிருக்கிறான், நானவனிடம்தான், இன்னங்கற்கிறேன். நல்லகுணவான்தான் பிறருக்குச்சட்டதிட்டஞ்சொல்வதில், அண்ணா நாராயணனுமிப்படித்தான்," என,

"உங்களண்ணா நாராயணனுக்குக்காலமே அர்ஜண்டாய்த் தந்தி கொடுத்தாய்விட்டதே இன்றிரவு வரும்படி," என்று கமலா சொன்னவுடன்; லக்ஷிமி, "பார்த்தாயோடி கமலா! நான் சொன்னபடி இருவரும் டம்பாச்சாரிகள் தான், அதுபோகட்டும், இன்னுமொருவரையுங்காணோமே, கூப்பிடவருகிறவர்களில்லை, சீக்கிரம் வந்துவிடுங்கள் என்று ஒற்படியுடன் சொல்லியும் வரவில்லை பார்த்தாயோ! என்னயிருந்தாலும வள் காவேரி பிரதேசத்தைச்சேர்ந்தவள், நம்மைப்போல் கடற்கரைப்பிரதேசமா? இருக்கட்டும் கலியாணப்பந்தலில் தாலிகட்ட மறந்துபோனதுபோல் இந்தாத்துக்காரர் இலைவாங்க மறந்துவிட்டார். சீமாசன் வந்தால் இலைகூட போட்டுவைக்கப்படாதோவென்று கோபித்துக்கொள்வான், என்னடியம்மா செய்வேன் கமலா! நீயாவதுபோய் ஒற்படியையழைத்துக்கொண்டுவா, நான்போய் நம்மகத்தில் இலை இருந்தால் எடுத்து வருகிறேன்" என்று லக்ஷிமி யவளையனுப்பிவிட்டு, தான் வீடுசென்று நிலாச் சாப்பாட்டுக்கென்று நல்ல தலைவாழையிலையாய்த் தோட்டத்திலிருந்து அன்றறுத்துக்கட்டுக்கட்டி வைத்திருந்த கட்டையவிழ்த்து, தனக்கப்போது செலவிற்கு வேண்டிய இலைகளை அறுத்துச் சிறுகட்டாய்க் கட்டிக்கொண்டு தன்வீடுவந்து எல்லாருக்குமிலைபோட்டு அன்னம் தவிர சித்தமாய் மற்றது பரிமாறிக்கொண்டிருக்கையில், "என்னடியம்மா லக்ஷிமி! இன்னுமாகவில்லையா? ஒருவரையுங்காணோமே! உங்ககத்திலேயே தாமதந்தான்," என்று சொல்லிக்கொண்டே ஸ்ரீநிவாஸன் வந்தான்.

உடனே லக்ஷிமி திடுக்கிட்டு, ஸ்ரீநிவாஸனே வந்துவிட்டான், இவாள் ஒருவரையுங்காணோமே; என்று பதைபதைத்து, "அப்பா சீமா! வா, இந்தா ஜலமிந்த செம்பிலிருக்கிறது, கைகாலலம்பிக்கொண்டு, முகத்திலிருக்கும் வேர்வையைத் துடைத்துக்கொண்டு உட்காரு," என்று சொல்ல, ஸ்ரீநிவாஸன் "உங்காத்துக்காரன் எங்கே? எனக்கு முன்னாலே வந்தானே; இரங்கசாமி, உன்னோர்ப்படி நாகலக்ஷிமி எங்கேயினனுங்காணோம்? கமலா எங்கே போனாள்? நீ மாத்திரந்தனியேயிருப்பதென்ன? என்னைப்பலவிதத்திலேயுமுபத்திரவிக்கிறீர்களடியம்மா! இன்று கச்சேரி கெட்டது உன்னாலே லக்ஷிமி, நம்மகத்திலேயுஞ்சமைக்காமல்—"என்ற ஸ்ரீநிவாஸனுடைய கோபக்குறியைக்கண்ட லக்ஷிமி, "அப்பா சீமா! கோபிக்காதே, என் மிஸ்டேக் தானது, நான் உங்ககம் வந்தபோதே சமையலாகிவிட்டது, மச்சினன், ஓர்ப்படி இன்னுங்காணோமென்றுதான் உன் தோழன் போயிருக்கிறாரழைக்க, கமலாவையும்போகச்சொன்னேன் சீக்கிரமழைத்துவரும்படி. இன்னும் வரக்காணோம்பார் ஐயோ நீ பட்டினியாயிருக்கிறாயே! பசிபொருக்கமாட்டாயே! மணியுமொன்றடிக்கப்போகிறதேடி கண்ணம்மா! நீ முதலில் உட்காரு இலைமுன், அவர்களெல்லாம் வந்தால் பின்னால் போஜனஞ்செய்யட்டும், இவாள் பின்னேடே முன்னமேயே வந்த உனக்கு இத்தேசகாலமென்னடி? நடுவில் யார் வம்பு வளக்க வந்தாளோ?"

ஸ்ரீநிவாஸன்:—"வம்புக்கொருவரும் வந்தார்களில்லை. இன்றிரவில் நிலாப்போசனத்திற்கு ஆகவேண்டிய சில ஏற்பாடுகள் செய்துகொண்டிருந்தேன். அவர்களெல்லாரும் வந்தபிறகு நானும் போஜனஞ்செய்கிறேன்."

இலக்ஷிமி:—"என் கண்ணம்மா நீ நிர்நிமித்தியமாய் நிலாபபோசனஞ்செய்யயெத்தனித்ததை என்னிடஞ்சொன்னாயில்லையே?"

"ஸ்ரீநிவாஸன்:—நிர்நிமித்தியமாய் இன்று உன் மச்சினனுக்கு நீ விருந்துசெய்

யயெத்தனித்ததைப்போலத்தான்."

இலக்ஷிமி:—"இடும்பைப்பார்! நானு நிர்நிமித்தியமாய் செசேன்."

ஸ்ரீநிவாஸன்:—"பின்னரடியம்மா லக்ஷிமி! நானு—? நிஜம்மா சொல்லு, நீ ஒருகாலத்தில் நம்மகத்து மாடியில், சுக்லபக்ஷத்துச்சந்திரிகையில், பத்துப்பேர்களா ய்க்கூடி, வேடிக்கையாயுண்டு, ஆடிப்பாடிக்குதிக்கவேண்டுமென்று சொல்லவில்லை யா?"

இலக்ஷிமி:—"அதற்கென்னயிப்போ?"

ஸ்ரீநிவாசன்:—"பின்னதற்கு வேறெப்போதுதான் சமயம்—இன்று சைத்தி ரசுக்ல பக்ஷமல்லவோ? திரயோதசி, 25 26 நாழிகை வரையில் நிலவுகாயும்: மேலும் நம்ம ஆபீசு 'சாயா' இராஜரத்நமய்யர் இதிலெல்லாம் பிரியப்பட்டவர். நம்மநாரா யணனுக்குத்தான் சொல்லவேவேண்டாம்!"

லக்ஷிமி:—"ஆனல் அண்ணு நாராயணன் வருவானே இன்றிரவு?"

ஸ்ரீநிவாஸன்:—"தந்தி கொடுத்திருக்கிறேன். வருவானென்று தானிருக்கி றேன். வராவிட்டால் பதில் தந்தியாவது வரும்."

லக்ஷிமி;—"இன்றிரவில் நடத்தும் விருந்திற்கென்னென்ன ஏற்பாடு?"

ஸ்ரீநிவாசன்:—"நீதான் சொல்லவேண்டும். வரப்பட்ட புருஷர்களை யுபச ரிக்கும் வேலை யென்னுடைய கடமை. ஸ்திரீகளை யுபசரிக்க வேண்டிய கடமை யுன்னுடையது, நாராயணன் பெண்டாட்டி சுப்பலக்ஷிமியையுஞ் சேர்த்துககொள். மற்ற யெல்லாவற்றிற்கும் நீதான் மானேஜ்மெண்டு செய்யவேண்டிய வளாயி ற்றே."

லக்ஷிமி:—எண்டா சீமா! கமலாவுக் கொருவேலையுமில்லையா?"

ஸ்ரீநிவாஸன்:—"என்னடியம்மா! அவள் சுத்த கர்னுடகம் என்று தெரிந்திருந் தும் என் வாயை கிளப்புகிருயே! இதுதானு சமயம்— நான் கேட்டத்தைவிட்டு—"

லக்ஷிமி:—"அப்பா! நீ கோபித்துக்கொள்ள வேண்டாம். நான் சொல்வ தைக்கேள். புளியோதரை, வெண்பொங்கல், பகாளபாத்து, சேனைக்கிழங்கு, உப் பேரி, கத்திரிப்பிஞ்சு சாம்பார், இதுவே போறுமானது, அவைகளைக்கூட நீங்கள சாப்பிட்டானல் உடனே தயார்செய்து சூரியஸ்தமனமானதும் நம்ம மாடியில் கொ ண்டு சேர்த்து விடலாமென்றிருக்கிறேன். உன்னிஷ்ட மெதுவோ."

ஸ்ரீநிவாஸன்:—"நீ எது செய்தாலுஞ் சம்மதந்தான்! நான் தான் உன்பாடெ ன்று விட்டு விட்டேனே! லக்ஷிமி! சக்கர பொங்கல் வேண்டாமோ? தளிவடாம், அப் பளா முதலானதுகள் வேண்டாமா?"

லக்ஷிமி:—"இராத்திரி கால மாச்சுதே, இவ்வளவே போதுமென்று சொன் னேன்.' "என் செய்ய வேண்டியதைச் செய்யட்டுமே! தேங்காய் சட்னியையுஞ் சே ர்த்துக்கொள்ளுங்கள். எம்மச்சினன் மார்களுக்கு சட்னிமுக்கியம். இன்னுமெந்த தினுசுகள் பண்ணினலுஞ் சம்மதந்தான். திருப்தியாயுண்டுகளிப்பார்கள்." என்று சொல்லிக்கொண்டே கமலாம்பாள் வந்து சேர்ந்தாள்."

ஸ்ரீநிவாஸன்:—"லக்ஷிமியு நீயுஞ்சேர்ந்தெது வேண்டுமானலுஞ் செய்யுங்கள்."

:

"எது இன்னம் வரக்காணம் இரங்கசாமி, நாகலக்ஷிமி, சுந்தரம்' இவள் வந்துவிட்டாள்." "அடியேகமலா! எங்கே அவர்கள்?"

கமலாம்பாள்:—"அவர்களும் வருகிறுர்கள்?"

லக்ஷிமி:—"நன்ஞ வருகிறுர்கள்! என் கண்ணம்மா! இரர்த்திரி சுமார் எத்தனே பேராகுமோ?"

ஸ்ரீநிவாஸன்:—"நாற்பதைம்பது பேராகலாம்?"

லக்ஷிமி:—"கமலாகர்ப்பிணி. அவளுக்காகவே நானும் யோசித்ததுதான்.'—

ஸ்ரீநிவாஸன்:—"நீ மாத்திரமென்ன—? சரி, எல்லாவற்றிற்குமிது உனக்கே திருப்திதானே? நான் பிழைத்தேண்டியம்மா? இராஜமய்யர் தெரியுமா?"

லக்ஷிமி:—"வைக்கில் இராஜமய்யன்தானே?"

ஸ்ரீநிவாஸன்:—"ஆம், அவருக்கித்தகைய விருந்துண்ணல். ஆடல் பாடல்களில் விருப்பமதிகமாயிற்றே! வேடிக்கையாயும் சாலக்காயும் பெசுவரேன்ஞே அவர்தான்." அண்ணத்தூர் கணக்கு உமாபதி அய்யர், அவர் தம்பி துரைசாமி இவர்களேத்தானமா அதிகப்படியாய் நான் சொல்லியிருக்கிறேன் போஜனத்திற்கு, மற்றவர்கள் எங்காபீசு குமஸ்தாக்களும், நம்மைச்சேர்ந்தவர்களும் தான்."

லக்ஷிமி:—"எல்லா முன் செலவுதானே?"

ஸ்ரீனிவாஸன்:—"ஆஞலவர்களேக் கேட்கவா சொல்லுகிறுய். எது வரவர உனக்கு புத்தி தீக்ஷணியமாகிறது?"

லக்ஷிமி:—"நான் அவர்களேக்கேட்கவாசொன்னேன். அவர்களுன்னே யிவ்வாறு தூண்டிவிடுவதும், நீ ஏமாளியிதற்கெல்லாமேற்படுவதும் எனக்கு நன்ருயிருக்கவில்லே."

ஸ்ரீநிவாஸன்:—"பிறர் தூண்டுதலென்ன? நாமே யோசித்ததுதானே!"

லக்ஷிமி:—"இதற்காக சொல்லவில்லே. இனி இந்தமாதிரி வீண் செலவு வைத்துக்கொள்ளவேண்டாம். சத்விஷயத்தில் பண்ணிஞலுஞ்சார்த்தகமுண்டு என்றுதான்—;"

ஸ்ரீநிவாஸன்:—"எனக்கு என்ன பைத்தியமா?"

இவர்களிவ்வாறு பேசிக்கொண்டிருக்கையில் சுந்தரம், இரங்கசாமி, நாஞ, வாத்தியார் வந்தார்கள். நாகலக்ஷமி(இரங்கசாமி அகமுடையாள்) எல்லாருக்கும் பின்ஞல்வந்தாள். எல்லாரும் பாத பிரக்ஷாளனஞ்செய்துகொண்டு தத்தம்கலத்திலமர்ந்தார்கள். இலக்ஷிமியவரவர்கள் மனமறிந்துப் பிரியமாய் விருந்திட்டுபசரித்தனள்.

அப்போது இரங்கசாமி, "கண்ணுவுக்கிங்கே போஜனமென்பது தெரிந்திருந்தால் கொஞ்சமுன்ஞடி வந்திருக்கலாம்" என, ஸ்ரீநிவாஸன், "எதோ ஆன்ஹிகங்கள் முடிந்துதானேயாகவேண்டும். எனக்கு முன்ஞடியிவ்விருந்தைப்பற்றித் தெரிந்திருந்தால் நானே ஜல்திப்படுத்தியிருப்பேன்," என்றிவ்வாறு வேடிக்கையாய் வார்த்தையாடிக்கொண்டே இனிப்பு, கார்ப்பு, கரிப்பு, உவர்ப்பு, துவர்ப்பு, புளிப்பு, என்னுமறுசுவைகளுடன் கூடிய உண்டியையுண்டு களித்தார்கள். பிறகு லக்ஷிமி

கமலாவுடன் உண்டு இராத்திரிக்கு வேண்டியவற்றை ஜாக்கிரதைசெய்வதில் முயற்சித்தாள்.

இன்னும் வரும்

கூரைகள்.

நமது தேசத்தவர் வீடுகளில் விலையுயர்ந்த வேலைகள் செய்யும் முக்கியமான அம்சங்களில் கூரையும் ஒன்று. கட்டிடங்களின் மேல் கூரைகள் போடுவது அதன் கீழுள்ள சுவர்களின் உறுதிக்காகவும், மழைக்கும், காற்றுக்கும, சூரிய கிரணங்களுக்கும் வீடுகளில் வசிக்கு மானிடர்களைக்காட்டிக்கொடாமலிருப்பதற்காகவுந்தான். இது விஷயம் எளியவரும் வலியவரும் கவனிக்கவேண்டிய கடமையேயாம்.

சிலர் வீடுகளில் கூரைகள் வெகுநாளிருக்கவேண்டுமென்ற ஆசைப்பேய்ப்பிடித்து கனத்த தெண்டுகளையும், அட்டைகளையும் சுவர்மேற் போட்டுச் சுவர்கள் கனம் தாங்காது சாயும்படிச்செய்துவிட்டு அதனுல் பலகேடுகள் வருவித்துக்கொள்கின்றூர்கள்.

இவ்வளவு அகலமுள்ள கட்டிடத்திற்கு இவ்விதமான கூரை போடலாமென்றும், அல்லது தாரி எஃகு கூரையே (Terrace Roof) போடவேண்டுமானுல் இவ்வளவு கனமுமகலமுமுள்ள அட்டை அல்லது திராவி (Joist) போட்டால் போதுமென்றும் தெரிந்து கொள்வது அவசியம். கூரைகள் கட்டும்போது மேல் சாமான்கள் உறுதியானவைகளாகவும், சுவர்க்ள் தாங்கக்கூடிய கனமுள்ளவைகளாகவும் இருக்கவேண்டும். அக்கூரைகள் 1. தாரிசுக்கூரை (Terrace Roof), 2. தாள்வாரக்கூரை, 3. இருபுறமுஞ்சாய்ந்த கூரை என மூவகைப்படும்: கட்டிடத்தின் அகலம் 16 அடிக்குமேற்பட்டிருந்தால் தெண்டு அல்லது மாதிரி (Beam) போடவேண்டும்; மரம் அல்லது கல்வடிம்பு சாதாரணமாய் ஒருஅடி முதல் ஒன்றரை அடி அகலமும, அரை அடி முதல் முக்கால் அடி கனமும், இரண்டடி முதல் நாலடி நீளமுமாக விருக்கவேண்டும். இந்த உத்திரங்கள் சுவரில் ஒருஅடிக்குக்குறையாமல் செலுத்தப்பட்டு இருபுறங்களிலும் (பக்கங்கள்) காற்றுடும்படிச்சிறிது இடைவெளிவிட்டுக் கட்டப்படவேண்டும். அதற்குக்குறுக்கே நிகளமாகத்திராவிகளைப் போடவேண்டும். அங்ஙனம் போடுங்கால் திராவிகள் படபாதியாகச்சேர்த்துப்போடவேண்டும்.

திராவிகளின் அகலத்தையும் கனத்தையுங் கண்டுபிடிக்கும் வழி:—

ஒரு கட்டிடத்தின் அகலம் 12 அடியென்றும், இருபுறமுஞ் சுவர்கள் ஒன்றரை ஒன்றரை அடி கனம் (அகலம்) ஆக 15 அடி என்றும் வைத

க்கொள்வோம். இதில் நமக்குவேண்டியத்திராவியின் நிகளம் சுவருக்குச்சு வர் பன்னிரண்டடியும், சுவருக்குள் ஒவ்வொருபுறத்துக்கும் ஒன்பதொன் பதங்குலமாக ஒன்றரை அடியும் பதிமூன்றரையடியுள்ளத்திராவிவேண்டும் சுவரில் செலுத்தியிருக்கும் நிகளத்தைத்தள்ளி 12 அடிக்குமட்டுமே கணக் கெடுக்கவேண்டும்; அங்ஙனங்கணக்கெடுக்குங்கால் அடிக்குக்காலங்குல அ கலமாகவும், அரை அங்குல கனமாகவும் கணக்கெடுக்கவெண்டும்; அவ்வித ங்கணக்கெடுத்துப்பார்க்க 12 அடிக்கு 3 அங்குல அகலமும், 6 அங்குலகன மும் வேண்டுமென ஏற்பட்டது; ஆதலால் இந்தக்கட்டிடத்துக்கு 3 அங்கு ல அகலமும், 6 அங்குல கனமுமுள்ள $13\frac{1}{2}$ அடியுள்ளத்திராவிகள் போட வேண்டும். எந்தக்கட்டிடங்களுக்கும் திராவிகள் 3 அங்குல கனத்துக்குக் குறையாமலிருக்கவேண்டுமென்பதை கவனித்தல் அவசியம். திராவிகளை மா திரி (Beam) மீது வைக்கும்போது அகலப்பாட்டையே வைக்கவேண்டுமெ ன்பதும் கவனிக்கத்தக்கது.

உத்திரத்தின் அகலமுங் கனமும் கண்டுபிடிக்கும் வழி:—

முன் திராவிகளைப் பற்றிச்சொல்லியதுபோல் சுவரினுள்ளிருக்கும் ...ளத்தைத்தள்ளி மீதியுள்ள கட்டிடத்தின் அகலத்துக்கு அடிக்கு $\frac{1}{2}$ அங் ...ல அகலமும் முக்கால், அங்குல கனமுமாக கணக்கிட்டு அகலப்பாட் ...யே கல்வடிமபு (Stone Plate) மேல் வைக்கவேண்டியது. 25 அடி ...க்கு மேற்பட்ட கட்டிடத்துக்கு மரத்தெண்டு போடுவது சரியல் ...ன்மீது போடப்பட்ட இரண்டுத்திராவிகளுக்கு நடுவெயிருக்கு ...ரையங்குல கனத்துக்கு மேற்படாத சிறு பலகைத்துண்டுக ...புறமுமூடவேண்டும்; இது குருவி முதலியவைகள் கூடுகெட்டித் ...ரவு கொடாமலிருப்பதற்காகவே தான். சித்திரவேலைகள் செய்வ ...ரும் பிரயோசனப்படும் நிற்க; தாரிசுக்கூரை போடும்போது கவனி ...வண்டிய அம்சங்களில் மழை முதலிய ஜலம் கூரையின்மீது தங்காமல் ...ங்தோடும்படி வாட்டம் வைக்கவேண்டுமென்பதுமொன்று.

அங்ஙனம் வாட்டங் கொடுத்தலிருவகைப்படும். அது ஒருபுறமே ...ங்தோடும்படிச்செய்வதும், இருபுறமும் வழிங்தோடும்படிச்செய்வதுமாம், ...தெவ்வாறெனின்:—

1. ஒருபுறமே வழிங்தோடும்படிச் செய்யவேண்டுமானல் தெண்டு ...லது திராவிகளை ஓர்புறமுயர்த்துதல் போதும்; இந்த வாட்டம் 3 அடி ...ஒரு அங்குலம் இருத்தல்வேண்டும்.

2. இருபுறமும் வழிங்தோடும்படிச்செய்யவேண்டுமானல் தெண்டி ...ு நடுவில் இரண்டு அல்லது 3 அங்குல கனம் அல்லது உயரமுள்ள

மரப்பலகைத்துண்டுகள் வைத்து இருபுறமுஞ்சரிவாக உயரத்தைக்குறைத்துவிடவேண்டுவதுடன் அவைகள் நகராதிருக்கும் வண்ணம் ஆணிகளால் இணககவேண்டும். இதற்குத்தான் பில்லட்டிங் (Filleting) என்றும் சொல்வார்கள்.

இதுவும் தவிர, தெண்டை நடுவில் கனமாக வைத்து இருபுறமும் சரிவாக வேண்டிய வாட்டத்துக்குச் செதுக்கிவிடுவதும் வழக்கந்தான். இதற்கு (Cambering) எனப்பேர் வழங்குகின்றது.

நம்மவரில் சிலர், இந்த வாட்டத்தைத் தாரிசுக்கூரைமேல் போடப்படும் செங்கல் சுண்ணாம்பினாலேயே கரைத்துவிடுகிறார்கள்; இது தவறு. தெண்டின் மீது பாரம் நடுவில் அதிகமாகவும், மற்றப்பக்கங்களிவ்வளவு இல்லாமலுமிருப்பதால் கெடுதல் நேரிடுவது சகஜம்.

தாரிசுக்கூரை போடும் விதத்தைப்பற்றிச்சிறிது ஆலோசிப்போம்.

தாரிசுச்கூரைக்கு வேண்டிய மரத்தெண்டு, திராவிகள் முதலியவை போடப்பட்ட பின்பு தாரிசு செங்கல், சதுரஓடு ஜல்லி, பூசுவேலை முதலியவைகளால் முடிவுபெறவேண்டும். ஆதலின் இது விஷயத்தை விவரமாய் எழுதுவோம்.

இன்னும் வரும்.

சுகாதாரவிளக்கத்தைப்பற்றிய விசேஷக்குறி[illegible]

7. வீட்டின் சமீபத்தில் மலமூத்திராதிகளை விடாமலு[illegible]ப்பைகளை எறியாமலும் இருக்கவேண்டும்; ஆடுமாடுகளைத் தக்கவி[illegible] வீட்டிற்கப்பால் கட்டவேண்டும்.

8. பூமியானது கடற்பஞ்சைப்போல் மயிர்முளை துவாரமுள்ள[illegible]கி வாயு, தண்ணீர் இவற்றைக்கொண்டிருப்பதாலும்; சூரியவெப்பத்தின[illegible] காற்றுவீசுவதினாலும் நிலைமை மாறிக்கொண்டிருப்பதினாலும்; வீட்டை[illegible]ற்றிலும தண்ணீர்குழிகளில் தேங்கினால், பூமிசுத்தமாயிருக்குந்தன்மை[illegible]ட்டு வியாதிகட்குக்காரணமான அசுத்தமுண்டாகுமாதலால், அப்படி[illegible]ங்காமல் வெளியே போகும்படி செய்யவேண்டும்.

9. வீட்டை உயர்ந்த மட்டத்தில் சட்டுவதற்கு அஸ்திவார[illegible] உயர்த்தல் வேண்டும்.

10. அசுத்தவாயு மேலே வரவொட்டாமல் தடுக்கும்படி வீட்[illegible] தரைமட்டத்தை செங்கல்லினாலாவது, கப்பியினாலாவது (Concrete[illegible] கைகளைக்கொண்டாவது மூடவேண்டும்.

11. அசுத்தங்களை மழையில் நனைந்து வெயிலில் காயும்படி வி[illegible]டாது, அதினால் அசுத்தவாயு உண்டாகுமென்பது நாசியினாலறியலா[illegible]

12. நாம் எறிந்த குப்பை நனைந்து காய்வதால் அசுத்த வாயுவை நாம்சுவாசிக்கிறோம்.

13. வீட்டின் வெளிப்புறத்திலிருக்கும் தரைமட்டத்திற்கு வீட்டின் தரைமட்டம் உயர்த்தியாயிருந்தால் ஓதத்திற்கிடங்கொடாது.

SOUTH INDIAN RAILWAY COMPANY.

தென் இந்தியா ரெயில்வே கம்பெனி.

தென்னிந்தியா ரெயில்வேயில் ஜனங்களுக்கு நேரிடும் அசௌகர்யத்தின் மிகுதியை இப்போது எம்மாலிங்கு எழுதி முடிவதன்று. பலவகைகளிலும் சார்ஜுகளை உயர்த்திப் பணம் சம்பாதிக்கத்தலைப்பட்டு விட்டார்களேயன்றி, ஜனங்கள் சௌகர்யமாய் ஸ்டேஷன்களில் தங்கியிருக்க இடமும், வண்டியில் நிராடங்கமாய் சண்டை சச்சரவுகளின்றி சௌகர்யமாய் பிரயாணஞ்செய்பத்தகுந்த ஏற்பாடுகளுஞ்செய்தார்களில்லை. இரயில்வேயைச்சேர்ந்த சட்டதிட்டங்கள் யாவும் அச்சிடப்பட்டு புத்தகங்களிலிருக்கின்றனவேயொழிய, அந்தப்படி அவைகள் நடவடிக்கையில் இல்லை. ஸ்டேஷன்களிலுள்ள உத்தியோகஸ்தர்கள் ஜனங்களின் அவஸ்தைகளைத்தாங்களே கவனிப்பதுமில்லை; முறையிட்டாலுங் கேள்ப்பதுமில்லை. கல்கத்தாவில் இருட்டறையில் தவித்த வீரர்களைப்போல ஒவ்வொரு கம்பார்ட்மெண்டிலும் (Compartment)எட்டுப்பேர் வீற்றிருப்பதற்குப்பதிலாக அப்படி மூன்றுபங்கு ஜனங்களடைகின்றார்கள். அதினால் வண்டியில் முன்னமே ஏறியிருக்கின்ற ஸ்திரீகளும, குழந்தைகளும், சிசுக்களும்,கர்ப்பிணிகளும் காட்டுச்சனங்களால் மிதிக்கப்பட்டும், அவர்கள்மேல் மூட்டை முடிச்சுப்பாத்திரங்களைக்கொண்டுவந்து போட்டும் ஹிம்சிப்பதினால், யானைக்காலிலகப்பட்ட முயற்குட்டிகளைப்போல் வருத்தப்பட்டு கோவென்று அலறுகிறார்கள். இவ்விரைச்சலுண்டாவதைப்பற்றி ஸ்டேஷன்களிலேயே கேள்வியில்லாமற் போனால், வண்டி ஓடும்போது ஒருவருக்கொருவர் அடித்துக்கொண்டும், வைதுக்கொண்டும் பெருங்கலகம் விளைப்பதைச்சக்தியி லாதவன் பொறுத்துக்கொள்வதைத்தவிர வேறுகதியில்லை.

இரயில்வே கம்பெனியார் ஜனங்களின் சௌகர்யத்தின் பொருட்டு பற்பலஏற்பாடுகள் செய்திருப்பினும், அவைகளை ஸ்டேஷன்மாஸ்டர்கள் கவனித்தால் இவ்வளவு கெடுதலுக்கிடமிராது. போலீஸ் புலிகளோ காசிபறிக்க வழிதேடிக்கொண்டு வண்டிக்குள்ளிருக்கும்படியானவர்களைப் பல்லொடையும்படி கீழே இழுத்துத்தள்ளியும், யாதாயினுமல்ப வெகுமானங்கொடுத்தவர்களை ஜனங்கள் நெருக்கத்தால் அவஸ்தைப்படுவதைப்பாராமல் உள்

ளே தள்ளியும் நிற்பந்தஞ்செய்கிறார்கள்.

டிக்கட்டுகள் கொடுக்குமிடங்களிலும் மேற்படி சேவக வீரர்கள் டிக்கெட்டு வாங்குபவர்கள் மேற்பாய்ந்து அவர்கள் தாமே வலியத் தங்களுக்குப்பணம கொடுக்கும்படி வழி தேடிக்கொள்ளுகிறார்கள். இந்தக்காரணங்களால் பிரயாணிகளுக்கு உண்டாகுமவஸ்தை கடவுளுக்குத்தான் வெளிச்சம். இரயில்வேகம்பெனியார் தங்களால்நியமித்திருக்கும்படியான உத்தியோகஸ்தர்கள் தங்கட்குக்கிரமப்படி பணம் வசூலித்துக்கொடுப்பதில் கெவனித்து வருவதுபோல், ஜனங்களின் அசௌக்கியத்திலும் அவ்வுத்தியோகஸ்தர்கள் திருஷ்டி வைத்து வருகிறார்களாவென்று பரிசீலனை பண்ணுவார்களாகில், ஜனங்களுக்குக் கெடுதிகளுண்டாவதற்கு இடமிராது.

தீர்த்தபுரி.

நாவலந்தீவினைச்சுற்றி யிந்நகர்க்
காவலன் வந்தவக்காட்சியாமெனப்
பூவலஞ் செயமுனட்போய செங்கதிர்
சேவலந் தூதன்முன் செப்பத்தோன்றினன்.

அந்தச்சமயத்தில் இளவரசன் வழக்கம்போல் காலைக்கடன்களை முடித்துக்கொண்டு தன் தமயனிருக்கும் அரண்மனைக்குப்போகும்பொருட்டு வெளியில் வந்தபொழுது மந்திரிமுதலான சகலபரிஜனங்களும் முன்னமேயே வந்திருக்கக்கண்டு அவர்களுடன் குசலபிரசனம் பண்ணிக் கொண்டு அரண்மனைக்குள் போனான். அதற்குமுன்னமேயே தன் சகோதரன் வந்துவிட்டதாய்ச் சிலர் வந்து சொல்லக்கேட்ட சந்தோஷத்தினால் அவ்வரசனது தேகத்திலுள்ள நோயானது அவனைவிட்டோடுதற்கு வழிதேடிகொண்டிருந்தது.

அத்தருணத்தில் சகோதரன் வாய்குழறக்கண்ணீர் பொழிந்து தன் காலில் வந்து விழக்கண்டு அவ்விளவலைத்தன்னுடலிலுள்ள நோய் நீங்கி சிறிது சக்திபெற்ற அவ்வரசன் இருகப்புல்லிக்கொண்டு, "எனக்குபகாரியாயிருந்த உன் விஷயத்தில் துரோகஞ்செய்த கொடிய பாபியாகிய என்னை வந்து பார்ப்பதற்கு உன்மனம் துணிவுற்றதா?" என்பது முதலிய இரக்கமொழிகளைச்சொல்லிக்கொண்டு அழுதான். பின்பு அவ்விருவரும் ஒருவாறுமனந்தேறினார்கள். அரசன் பின்னும் சகோதரனைப்பார்த்து, "நான்வயதிலுனக்குப்பெரியவனாயிருப்பினும், நீ விவேகத்தினால் எனக்குப்பெரியவனாயிருந்தமையால், நான் உனக்குத்தீங்கு செய்ய நினைத்தபொழுது அதற்குத்தப்பித்துக்கொண்டு ஓடிப்போயிருந்து, திரும்பவும் நான் செய்த அபராத

த்தை உன்மனதில் வைக்காமல் என்னைக்காப்பாற்றும்பொருட்டுத் திரும்பி வந்தாய்; அன்று நீ என்னைவிட்டு நீங்கிய பொழுதே 'உடற்பிறப்பாற்றோள் வலிபோம்' என்றபடி, முதுமைப்பருவத்தினால் என் தேகததிலுள்ள பலம் கெட்டு, நீ வந்த இப்பொழுதுதான் மீண்டுஞ் சிறிது பெற்றேன்; நீ வருவதற்கு முன்னிறந்துபோவதற்கு வழிபார்த்துக்கொண்டிருந்த நான், நமது உத்தியோகஸ்தர்களால் நீ உயிரோடிருப்பதை யறிந்து, உன்னிடத்தில் இந்த இராஜ்யத்தை ஒப்புவிக்கு நிமித்தம் என்னுயிரை இதுவரையில் கையில் பிடித்துககொண்டிருந்தேன்; நீ வந்துவிட்டமையால் இனி எனக்குக்கவலையொழிந்தது; இன்றுமுதல் சகல செல்வங்களையும், காரியஸ்தர்களையும் கைப்பற்றிக்கொண்டு நீடித்த வாயுளையுடையனாய் அனுபவித்துக்கொள்வாயாக;" என்று சொல்லித் தன் தம்பியின் கைகளைப்பிடித்துக் கண்களிலொற்றிக்கொண்டு பெருமூச்சுவிட்டு அயர்வு நீங்கினான்.

அதன்பின் அவ்வரசன் புத்திரப்பேறெய்தியவனைப்போல் சந்தோஷமிருந்து, தேவாலயங்கட்கு விசேஷ பூஜை செய்யவும், திருக்குளத்தைச்சுத்தி செய்து நீர் நிரப்பி தீபங்களாலலங்கரிக்கவும், நகரத்துச்சனங்களை உச்சவங்கொண்டாடவும், வேண்டியவைகளைத் தன்னரண்மனையிலிருந்து கொடுத்து விமரிசையாய் நடத்திவிக்குமபடி ஆஞ்ஞாபித்துத் தனது சமஸ்தானத்து உத்தியோகஸ்தர்கட்கும, தன் சகோதரனைக் கொலை செய்யாது தேயாந்திரததிற்கனுப்பின கொலையாளிகட்கும், அபரிமிதமாக ஆடையாபரணமுதலிய திரவியங்களை வெகுமானமாகக்கொடுத்து, வேதிபர்கட்கும் அனேக தானங்களைச்செய்து, எல்லாரையுந் தன்னைப்போல் சந்தோஷக்கடலின்மூழ்கப்பண்ணினான். பிறகு காரியஸ்தர்களை அவரவர்கள் வேலைமேற்செல்லும்படி யனுப்பிவிட்டு, தன் தப்பியுடன் ஸ்நாநம் பூஜை போஜன முதலியவைகளைச்செய்து, ஒருவருக்கொருவர் தங்கள் தங்கள் யோகக்ஷேமங்களைச் சொல்லிக்கொண்டு வேடிக்கையாய்க் காலங்கழித்தார்கள்.

பட்டணமெங்கும் உன்னதமான தோரணங்களானும், பந்தல்களானும், பட்டு விதானங்களானும், புட்பங்களானும், வாழை, கரும்பு, கமுகு முதலியவைகளானும், இளநீர்க்குலை, பழக்குலை முதலியவைகளானுமலங்கரிக்கப்பட்டு, தீபங்களும் வரிசை வரிசையாய் கோபுர முதலான உன்னதஸ்தானங்களிலும் தெருக்களிலும் விசேஷமாய் வைக்கப்பட்டிருந்தன; தேவாலயங்களிலும் அபிஷேக நைவேத்தியமும் திருவிளக்குகளுமாகிய சிறப்புகளைச்செய்து உச்சவமூர்த்தியை வாகனத்தோடு தெருக்களிலெழுந்தருளப்பண்ணியும், திருக்குளத்தில் இரதவடிவமாய்ச்செய்த தீபங்களை ஏற்றினாற்போல் நாற்புறத்திலும் தீபங்களை பிம்ப பிரதிபிம்பங்களாற் கீழ்புறத்திலுமேற்புறத்திலுந்தோன்றும்படி செய்தும், மத்தியிலுள்ள நீராழி மண்டபத்

தில் நானாவித வர்ணமுள்ள மத்தாப்பு பாணவேடிக்கைகளைச்செய்தும், அரண்மனையிலும் கோயில்களிலும் சகலவிதமான வாத்தியங்களும்ஓருவருககொருவர் வார்த்தையினால் சங்கதிகளைத் தெரிந்துகொள்ளாமல் அபிநயத்தால் தெரிந்துகொள்ளும்படி முழங்கவும், பிள்ளாங்குழல் வீணை மிருதங்க முதலிய வாத்தியங்களும் இனிய குரலோடு பாடியாடுகின்ற கூத்தியர் நடனம் புரிதலு மிகுதியாய்ச்செய்யப்பட்டன; அன்னதானங்கள் விசேஷமாய் ஒவ்வொரு வீடுகளிலும் செய்யப்பட்டன.

இவ்வாறு மிக்க ஆடம்பரத்துடன் உச்சவங்கொண்டாடின தினமுதல் லிங்காரெட்டியார் இராஜ்ஜியத்தின் சர்வ சுதந்தரத்தையும் பெற்றுககொண்டு தமயனாருடனிருந்து அரசுபுரிந்தார். சிலநாள் சென்ற பிறகு தமயனார் இறந்து போயினமையால், அவருக்குரிய கடன்களைச்செய்து, இராமேசுவர யாத்திரை செய்து, இராமநாதருக்குத்தாம கொண்டுவந்திருந்த கெங்கா தீர்த்தத்தாலும், மற்றும் அபிஷேக திரவியங்களாலும் திவ்வியாபிஷேகம் பண்ணிவைத்து சேவை செய்துகொண்டு திரும்பவும் துறையூரில் வந்திருந்து யதாபிரகாரம் அரசுபுரிந்த காலத்தில் தாம் காசிக்ஷேத்திரத்திலிருந்து கொண்டுவநதிருந்த பாணலிங்கத்தைப்பெரிய தெப்பக்குளத்திற்கு வடபாகத்தில் அதைவிடச் சிறந்த வேலைப்பாடுள்ள சிறிய தீர்த்தக்குளத்தைக்கட்டிஅக்குளத்திற்கெதிர்முகமாய் காசிவிசுவநாதசுவாமிகோயிலென்று பேர்பெற்ற ஓர் சிவத்தலத்தைக்கட்டி முடித்து அதில் பிரதிஷ்டை பண்ணினார். அப்பால் தமதரண்மனைக்கெதிரில் ஓர் திருமடங்கட்டுவித்து, அதில், திருவண்ணாமலையிலிருந்த தமது ஞானாசாரியரை அழைத்துக்கொண்டு வந்து அம்மடத்தில் வீற்றிருக்கச்செய்து சதா குருதரிசனஞ் செய்துகொண்டு காலங்கழித்து வந்தார்.

மலைபிரஸன்ன வெங்கிடாசலபதிசுவாமிகோயில் இவர்புத்திரராலோ பௌத்திரராலோ கட்டப்பட்டதாய்ச்சொல்லுகிறார்கள். அக்கோயில உன்னதமான மலையினுச்சியில் சிறந்த வேலைமானமாகக்கட்டப்பட்டிருக்கிறது. அக்கோயில் சுவாமிசன்னிதியில் உள்ள ஓர் ஸ்தம்பத்தில் இவ்விலிங்கா ரெட்டியாரை சிவலிங்கதாரணத்துடன் சிலாபிம்பமாகவமைக்கப்பட்டிருக்கிறது. அம்மலையடிவாரத்தில் கோவிந்தராஜப்பெருமாள் கோயிலும், தீர்த்தக்குளம் நந்தவனமிருப்பது, அக்கோயில் கட்டின பிரபுவின் பக்தியை மற்றவர்களுக்குச் சாட்சியாக விருந்து வெளிப்படுத்திக்கொணடிருக்கின்றன.

இத்துறையூரில் அன்ன சத்திரமொன்றுளது; அது கவித்தலம் மூப்பனார் சத்திரததுக்கு இரண்டாவதாகச்சொல்லும்படி அந்தணர்கட்கும் மற்றவர்கட்கும் அமுதளிக்கப்பட்டு வந்தது.

பெரிய ஏரியில் சுதை வேலையால் பளிங்கினாற்செய்ததுபோல் நயம்

வைத்து உள்ளே பார்ப்பவர்கள் தங்கள் பிரதிபிம்பத்தைக் கண்ணாடியின்றி பார்க்கும்படி மூன்று உப்பரிக்கைகள் ஒன்றின்மேலொன்றாக்கட்டப்பட்டுப் பின்புறத்தில் மடைப்பள்ளியுடன் சஜ்ஜை என்றுசொல்லும் ஓர்க்கட்டடம்கட்டப்பட்டிருந்து இப்போது அவைகள் நிலமாய்ப்போயிருக்கின்றன. அச்சஜ்ஜையில் முன்காலத்திலுள்ள ஜமீன்தார்கள் கோடைகாலத்தில் ஜலமத்தியில்வசிப்பதற்காக அதைக்கட்டி அதில்வாசம்பண்ணி வந்தார்களாம். இந்த ஏரி முன் காலங்களில் எப்பொழுதும் ஜலம் வற்றுகிற வழக்கமே கிடையாது. அதனால் ஏரிக்குள்ளிருந்த தெப்பக்குளம் கிணறுகள் எல்லாம் முழுகிப்போயிருந்தவைகள், எப்போதாவது ஒரு க்ஷாமகாலங்களில் அந்தக்குளம் கிணறுகள் ஜனங்களின் கண்களுக்குத்தோன்ற நேரிடுவதற்கு நாணங்கொண்டு கோஷாஸ்திரீகளைப்போல் எப்பொழுதும் ஜனங்களின் பார்வைக்குத் தோன்றாமலிருக்கக்கருதித்தானோ மண்மேட்டுக்குள் முழுகிப்போய்விட்டன! இவ்வாறு மண்மேடாயிருப்பதனால்தான் மூன்று மாதத்திற்கு மேவிட்ட ஜலம் இவ்வேரியில் இப்பொழுது தேங்குகிறதில்லை.

இவ்வண்ணம் சிறப்பு வாய்ந்துள்ள இந்நகரத்தில் வதிந்த பூர்வ ஜமீதார்கள் திருச்சிராப்பள்ளி, திருவையாறு, மதுரை, பழனி, சிதம்பரம் இராமேசுவர முதலிய புண்ணிய க்ஷேத்திரங்களில் கட்டளைகளும், உச்சவ மண்டகப்படிகளும் நடப்பிவித்து அதற்கு இயன்ற வருமானங்களுக்காய பூமிகளும் விடப்பட்டு அத்தருமங்கள் இன்றுந்தடைபெறாமல் நடந்துவருவதால்அவர்களை உலகமபுகழ்கின்றது. தற்காலத்திலிருக்கின்ற **ஜமீன்தார் பிரஸன்ன வெங்கடாசலரெட்டியார் துரையவர்களும்** தம்முன்னோரைப்போலவேமேற்படி தருமங்கள்சரியாய் நடந்துவருகின்றனவாவென்று சிரத்தையோடுபரிசீலனைசெய்து குறைவின்றி நடத்தி வருகின்றார்கள். அவ்வண்ண நடத்திவருவது அவருக்குப்புதிதாய்ச்செய்யுந்தருமங்களுக்குச்சரியான கீர்த்தியைப்பயக்கின்றது: ஆதலால் இனியும் இவ்வூரை ஆட்சிசெய்யும் அரசர்களும், அவர்களுடைய ஏவலர்களும, நற்குண நற்செயல் உடையராம் வண்ணம் அறக்கடவுள் இந்நகரத்தில் நிலைபெற்று வாழக்கடவதாக. சுபம்.

டி. பி. வி.

The cruelty of the Ruling Body against the Eminent Tamil Language.

அருமைத்தமிழுக்கா சாங்கத்தால் நேரிடும் ஆபத்து.

தமிழ்ச்செல்வியைப் பக்குவமாய்ப் பரிபாலித்து வருந்தாயாகிய சுகுணசுந்தரமே! தற்காலம் அரசாங்கத்தாரால் உன் மகட்கு நேரிடுகிற விப

த்தை நீயேன் கவனியாது தாழ்க்கின்றனை? உன் மகள் முன்னிலும் வரவர மலினமடைந்தமை பற்றி நீ முறையிடாதிருந்தமையானல்லவா தற்காலம் கொன்றுவிட முயற்சி செய்கின்றனர்! உன் மகளை வளர்ப்பதற்குப் பண்டு தமிழ் நாட்டரயர்களும, பொய்யடிமையில்லாப்புலவர்களும், தெய்வப்புலமைத் திருவள்ளுவரும் முதலிய பலருமிருந்தனர்; இப்பொழுதாதரிப்பாரின்றி மலினமடைவதேபோதாதா! முன்னிலுந்தற்காலங்கல்வி விருத்தியடைந்திருக்கின்றதென்று பலரெண்ணுகின்றனர; முன்படித்தவர்கள் குறைவாயிருந்தும் அவர்கள் படிப்பு மிகுந்திருந்தது; தற்காலம் படித்தவர்கள் மிகுந்திருந்தும் படிப்பு மிசக்குறைவாயிருப்பதுவே, தமிழ்க்கல்வி விருத்தியில்லைகுறைவென்று மறப்பதற்குத்தக்க வேதுவாகும: இது நிற்க.

தற்காலம் அங்கிலேய பாடசாலைகளில் எல்லா வகுப்புகளிலும் தமிழை இஷ்டமான பாடங்களி (Optionel Subjects) லொன்றாக வைத்திருந்தும அதைப்பரிக்ஷைப் பாடமாகவெடுத்துக கொண்டு, F. A., B A., பரிக்ஷைகளிற்றேறிய மாணுச்கர்களுள் தமிழைப் பிரத்தியேகமாய் விருத்தி செய்த சிலர் நீங்கலாக வேனையோர் தாங்கள் படித்த ஆங்கிலம, கணிதம் முதலியவற்றினகணுள்ள ஞானத்தினூற்றிலொருபங்கேனும் இத்தமிழ்ப்பாஷையிலில்லாமலிருப்பதையும, இத்தமிழ் குறைந்துவருவதற்கு மற்றொரு காரணமாகக்கூறி விருத்தியென்று சொல்வதை மறுக்கலாம. ஆங்கிலங்கற்ற மாணுக்கருட் பலர்க்கு இத்தமிழ்பாஷாஞானங் குறைந்துவருவதற்குப் பல சாரணங்களுள; அதிற்சிலவற்றை யீங்கெடுத்துரைப்பாம்:—(1) அவ்வவ்வகுப்புகளுக்குத்தக்க பாடபுத்தகங்கள் ஏற்படுத்தாதது; (2) ஒரு நூலையேனும் முற்றிலுங்கற்காதவண்ணமாய் சிற்சில நூல்களிலிருந்து சிற்சில செய்யுட்களைத்திரட்டிப் பாடபுத்தகமாகவைப்பது (3) தமிழ்ப்பாட பரிக்ஷையோடு மொழிபெயர்ப்புப் (Translation) பரிக்ஷையைக்கூடச் சேர்த்திருப்பது: (4) தமிழைப்போதிக்கின்ற உபாத்தியார்சட்குத்தக்க மரியாதையும், சமமும்பள ஏற்படாதது; இவைமுதலாகிய பல காரணங்களால் தமிழ்ப்பாஷை வரவர மலினமடைந்துவருவன தக்கவனியாது இப்பாஷை யிலகுவாய் வரக்கூடியதென்றும், பூர்வீகபாஷையன்றென்றும், வடமொழிச்சிதைவென்றும், வடமொழியைப்போல் அவ்வளவு மிகுதியாக மனப்பயிற்சியுண்டாக்காதென்றும் இக்காரணங்களால் சில கீழ்வகுப்புகளில்மட்டும் பாடம் வைத்தாற் போதுமென்று "அபிப்பிராயங்கேட்ட வரசாங்கத்தார்க்கு" அபிப்பிராயங் கேட்கப்பட்டவர்களாற் கூறப்பட்டிருப்பதைக்கேள்விப்பட மிக்க மனவருத்தமுண்டாகின்றது. இத்தன்மையவான வபிப்பிராயங்கூறக் காரணம் யாதென்று யோசிக்குமிடத்து, வடமொழிமுதலிய பாஷைகளில் மிக்கவபிமானமும்,இத்தமிழ்ப்பாஷையினிடத்துள்ள வெறுப்புமெனத்தோற்றுகின்றது: உலகத்துள் ஒவ்வொருவருக்கும் தங்கள் தேசம், பாஷை, மதமுதலியவற்றில்

விருப்பமிருக்கவேண்டுவதவசியந்தான்; ஆயினும், மற்றொன்றை யிகழ்வது மட்டும் நீதிதவறாதரசுபுரியும் நம் அங்கிலேயவரசாங்கத்தார் காலத்திற்கேற்றதன்று; இத்தமிழ் புராதன பாஷையென்பதையும், வடமொழிச்சிதைவன்றென்பதையும், வடமொழிப்பதங்களிற்சில இத்தமிழ்ப்பாஷையில் சிதைந்து வழங்குவதுபோல இத்தமிழ்ப்பதங்களிற்சில வடமொழியில் வழங்கிவருகின்றதையும், தென்மொழிக்கும் வடமொழிக்கும் யாதொரு சம்பந்தமுமின்றென்பதையும்பற்றி விவகரித்து இவ்வருமைத் தமிழ்ப்பாஷைக்கிழிவுகூறியவர்களின் முன்னிலையில் நிலைநாட்டப் பலருளரென்பது திண்ணம். இவ்வாறன்றி, இவர்களுடையவபிப்பிராயத்தின்படி காலேஜ் வகுப்புகளில் தமிழெடுத்துக்கொள்ளக்கூடாதென்றும் வடமொழிதான் எடுத்துக்கொள்ளவேண்டுமென்றவேற்பாடு முடிவடைந்து அனுஷ்டிக்கப்பட்டால், ஹைஸ்கூல்முதலிய கீழ்வகுப்புகளிற்படிக்கும் மாணாக்கர்கள் மேற்படிப்புக்குத்துணையாக வடமொழியை யெடுத்துக்கொள்வார்களேயன்றி, இத்தமிழை ஏன் எடுத்துக் கொள்வார்கள்? இதுவுமன்றி, தென்னிந்தியாவிலுள்ள பிராமணர்களைத்தவிர வடமொழிகற்க சந்தியற்றவர்களாய் வேனையோர் காலேஜ்வகுப்புகளில் எந்தப்பாஷையை யிஷ்டமானபாஷையாகவெடுத்துக்கொள்வார்கள்? இதனால் அவர்களுக்கு மேற்படிப்புப்படிக்க வழியில்லாமற்போவதுந்தவிர, ஐஸ்கூல்படிப்பைச்சுமார் 15-16 வயதிற்குள் கற்றுவிட்டபிறகு மேற்படிப்புக்கு வழியில்லாமலும், மிக்கவிளம்பிராயமாதலால் உத்தியோகம்பார்க்கத்திறமையற்றவர்களாகவும் ஆவதுந்தவிர, வயதுமுதிர்ந்தவுடன்பெரியவுத்தியோகமுங்கிடைக்காது துன்புறுவார்களே! இது, யாவரிடத்துந் துலைநாவொத்து அரசுபுரியும்நம் அரசாங்கத்தார்க்கிழுக்கன்றோ! இப்படிச்செய்வதால் நம்மருமைத்தமிழ்அடியோடற்று விடுமென்பதற்காடங்கமென்? நிற்க.

முன்னிலுந்தற்காலம் மலினமென்பதுகருதியன்றோ, நமதுகருணைக்கடலாகிய கனம்பொருந்திய **மகா-ள-ள-ஸ்ரீ சேதுபதிமகாராஜா அவர்கள்** தமிழினருமைபெருமைகளைச் செவ்விதாயறிந்தவர்களாதலால் மதுரையின்கண்சங்கமொன்றேற்படுத்தியாயிரக்கணக்காய்ப்பொருள்செலவு செய்வதுடன் விடாமுயற்சியோடு நடத்திவருகின்றார்கள்; இத்தகையகருணாகரற்குத் தமிழ்நாட்டார்புரியுங்கைம்மாறியாதோ? இவர்கள் கைம்மாறுகருதார்களாயினுந் தமிழ்நாட்டார்கள் அன்புபுரிதலாகிய கைம்மாற்றைச்செய்துவிடுவார்களென்றுநம்புகிறேன். **சுகுணசுந்தரமே! மகாராஜாவவர்களை** இவ்வேற்பாடுகூடாதென்று அரசாங்கத்தாரோடு மன்றாடும்வண்ணம், நீ அவர்களிடத்தில்முறையிடாதுஏன்உறங்குகின்றனை? இதுசமயம்!சமயம்! உறங்காதே? எழுந்திரு? நீசிறிதுநேரம் பேசாதிருப்பின், மோசம்வந்துவிடும்.

தற்காலம் ஏற்படப்போகு மேற்பாட்டால் தமிழ்பாஷைமுற்றிலும் நீங்கிவிடு மென்பதற்கு இன்னுமொருகாரணமுண்டு. அதாவது, அங்கிலேய பாடசாலைக ளில்தமிழைக்கற்பிப்பதற்கு ஒருவரல்லதிருவர்ஏற்பட்டிருப்பதை இனிவரு கிறவேற்பாட்டினால்நீக்கப்படுவதுதான். காலேஜ்வகுப்புக்களில்தமிழ்நீக்கப் பட்டவுடன், அதைப்போதிக்கின்றவர்களும்நீக்கப்படுவார்கள். ஹைஸ்கூல்மு தலியகீழ்வகுப்புக்களில்மேற்படிப்புக்கு உதவியாகும்படி வடமொழியையதிக ப்படுத்துவார்கள்; அதனால் ஹைஸ்கூல்கள்முதலியவற்றின்கண்ணுள்ளபண் டிதர்களும் நீக்கப்படுவார்கள். இக்காரணத்தினால் இனிதமிழ்கற்பவர்கள் இ க்கல்வியால் காலக்ஷேபத்திற்கு வழிசிறிதுமில்லையென்றறிந்து, கற்காமலே நின்றுவிடக்கொஞ்சகாலத்திற்செல்லாம் தமிழ்ப்பாஷைகற்பவரற்று முற்றி லும் நீங்குவதோடு தமிழ்நாட்டிற்கும் இப்பெயர் போய்வேறுளப்பெயராவாய் க்குமோவறிந்திலன். இதுசமயம் தமிழறிந்தபெரியோர்கள் இத்தமிழ்பாஷை யின் அருமை பெருமைகளையும், புராதனமானதனித்தபாஷையென்பதைய ும், வடமொழிச் சிதைவன்றென்பதுமன்றி வடமொழிக்குந் தென்மொழியா கிய தமிழிற்கும் யாதொருசம்பந்தமின்மை முதலாயபலவேதுக்களையுந் தெ ளிவாகவர சாங்கத்தார்க்கு வெளியிட்டு இவ்வேற்பாட்டை நீக்கிவிட முயற் சிசெய்வார்களென நம்பிஉன்வாயிலாக இவ்விஷயம்வெளியிடத்துணிந்தனன்

தஞ்சைவாசி

INVALUABLE HINTS TO DOCUMENT WRITERS.

தஸ்தாவேஜு எழுதுகிறவர்கட்கு வேண்டிய குறிப்புகள்.

பீடிகை

தாஸ்தாவேஜுகளை எழுதிக்கொள்ளும்விஷயமும், அதற்குஸ்டாம்பு, ரிஜிஸ்தரேஷன்பீசு, தஸ்தாவேஜு ரிஜிஸ்தரேஷன் அவசியம், இல்லை, தஸ் தாவேஜுஎழுதவேண்டியமாதிரி, இதுமுதலியவைகளையாவருஞ்செம்மையா ய்த்தெரிந்துகொள்ளும்பொருட்டு, இச்சுகுணசுந்தரமென்னும் பெரியஇப் பத்திரிகையில், சாமான்யமாய்வழங்கும் இங்கிலீஷ்முதலிய அன்னியபாஷை களையும் அவசியமானவிடங்களில் உபயோகித்துக்கொண்டு, எளியநடையில், மாதந்தோறும், தஸ்தாவேஜுவிவரங்களை எழுதிவரப்படும். இவ்வாறுபூர்த் தியானவுடன், இவ்விஷயங்களைச்சேர்த்துத்தனியே ஒருபுஸ்தகமாகப்பதிப்பி வித்து விற்பனைசெய்யப்படுவதுமல்லாமல், இப்பத்திரிகை சந்தாதாரர்கட்கு இனாமாக ஒவ்வொரு புத்தகங்கொடுத்துவரப்படும். இவ்விதம் பிரசுரம்செய் யவேண்டுமென்று அநேகமிருசுதாரர்களும், பத்திரம் எழுதுகிறவர்களும் எம்மைப்பலதடவைகளிற்றூண்டினமையால் இவ்விஷயத்தை இப்பத்திரிக் கைவாயிலாக வெளியிடத்துணிந்தனம்.

பத்திரம் ரிஜிஸ்தர் செய்வதினால் உண்டாகும் பயனாவன:—

1. தஸ்தாவேஜுகள் அஜாக்கிரதையினால் பாச்சை முதலிய பூச்சிகள் அரித்துப்போட்டாலும், தீப்பட்டு வெந்துபோனாலும், காணாமற்போனாலும், சுவல்ப செலவு செய்து அதற்கு நகல் சம்பாதித்துக்கொள்ளலாம்; அந்த நகல் அசலைப்போலவே செல்லும்.

2. தஸ்தாவேஜில், எழுதியிராத சங்கதியைச்சேர்த்தாலும், இருந்த சங்கதியை நீக்கிவிட்டாலும் அல்லது மாற்றினாலும் அவைகளை வெகு சுலபமாய்க்கண்டு கொள்ளலாம்.

3. ரிஜிஸ்தர் ஆகாத தஸ்தாவேஜுகளை ருசு செய்வதைப்பார்க்கிலும் ரிஜிஸ்தர் செய்திருக்கும் தஸ்தாவேஜுகளை ருசு செய்வது அதிக சுலபம்; அதற்குப்பிடிக்குஞ்செலவும் வெகு சொற்பம்.

4. ரிஜிஸ்தர் ஆன தஸ்தாவேஜு காணாமற்போனால் துர்வழக்காட இடமிராது.

5. கோர்ட்டு டிக்ரிகளை அநேகமாய் ரிஜிஸ்தர் செய்கிறதில்லை. அதுகளையும் ரிஜிஸ்தர் செய்துவிட்டால் 6 வருஷம் வரையில் கால தோஷமில்லாமல் செல்லும்; இல்லாவிடில், 3 வருஷமானவுடன் காலதோஷம் வந்துவிடும்.

தஸ்தாவேஜுகளின் விவரம்.

I

தானசாஸனம்

(Deed of Gift)

(*a*) தானசாஸனமானது கல்யாணத்தின் நிமித்யமாவது, மதவிஷயத்திற்காவது, தருமவிஷயத்திற்காவது, அசையும் பொருள் அல்லது அசையாப்பொருள்களை எழுத்துமூலமாய் செய்கிற யாதொரு பத்திரம் என்பது.

(*b*) தானசாஸ்னம் ரிஜிஸ்தரேஷன் ஆக்டு 17 (*a*) செக்ஷன்படிக்கும், டிரான்ஸ்பர் ஆப் ப்ராப்பர்ட்டி ஆக்டு (Transfer of Property act) 118-2 செக்ஷன்படிக்கும் ரூபாய் 100-க்கு மேற்பட்டும் உள்பட்டும் கட்டாயம் ரிஜிஸ்தர் செய்யப்படவேண்டும்.

(*c*) தானசாஸனத்திற்கு வேண்டும் ஸ்டாம்பின் விவரம்: ஸ்டாம்பு ஆக்டு, ஷிடியூல் 1, செக்ஷன் 33. (Section 33 of Stamp act II of 1899)

தொகை.		முத்திரை தீர்வை.	
ரூ	ரூ	ரூ	அ
1-க்கு மேல்	50 வரை ...	0	8
50 ,,	100 ,, ...	1	0
100 ,,	200 ,, ...	2	0
200 ,,	300 ,, ...	3	0
300 ,,	400 ,, ...	4	0
400 ,,	500 ,, ...	5	0
500 ,,	600 ,, ...	6	0
600 ,,	700 ,, ...	7	0
700 ,,	800 ,, ...	8	0
800 ,,	900 ,, ...	9	0
900 ,,	1000 ,, ...	10	0
1000ரூக்கு மேல் ஒவ்வொரு 500ரூக்கும் அல்லது அதின் பாகத்துக்கு.		5	0

(d) ரிஜிஸ்தரேஷன் கட்டணங்களின் விவரம்:—

தொகை.			கட்டணத் தீர்வை.	
ரூ		ரூ	ரூ	அ
1-முதல்		25 வரை ...	0	8
25-க்கு மேல்		50 ,, ...	0	12
50	,,	100 ,, ...	1	0
100	,,	300 ,, ...	1	8
300	,,	600 ,, ...	2	0
600	,,	1000 ,, ...	3	0
1000	,,	50000 ,, பிரதி 1000க்கும் அதின் பாகத்திற்கும்.	1	0
50000	,,	பிரதி ரூ 1000க்கும் அதின் பாகத்திற்கும்	0	8

(e) தஸ்தாவேஜுல எழுதவேண்டிய விஷயம்:—

1 டிஸ்திரிக்ட்டு, சப்டிஸ்திரிக்ட்டு, தாலூகா மகாணம் இவைகளின் பெயர்.

2 பட்டணம் அல்லது தாய்கிராமத்தின் பெயர், (பட்டணமானல்) முனிசிபல் வார்டு அல்லது டிவிஷனும், (கிராமத்தின் மஜராவானல்) மஜராவின் பெயரும்.

3 அயன், இனும், அல்லது ஜமீன்தாரி.

4 நன்செய், புன்செய், தோட்டம் அல்லது வீடு.

5 பைமாஷ் சர்வே, அல்லது முன்சிபல் நம்பர்.

6 சொத்துக்கு குறிப்பிட்ட பெயர் இருக்குமானல் அப்படிப்பட்ட பெயர்.

7 விஸ்தீரணம்.

8 மரங்கள், வீடுகள் கட்டடங்கள், கிணறுகள் முதலியவைகள் இருந்தால் அவைகள்.

9 நான்கு எல்லை.

10 முன் அனுபோகம்.

11 வேறு விசேஷங்கள் இருந்தால் அதுவும்.

☞ (a) சர்வை ஆன நிலங்கள் விஷயத்தில் சர்வை நம்பர், சப்நம்பர், அல்லது லெட்டர்கள்.

(b) நிலமானது ஓர் நம்பர் நன்செய் அல்லது புன்செய் நிலத்தின் பாகமாயிருந்து அதற்கு சப்நம்பர் அல்லது லெட்டர் ஏற்படாமலிருந்தால் அந்த நம்பர் நன்செய் அல்லது புன்செயில் எந்த பாகமென்பதும் எவ்வளவு பாகமென்பதும்.

(c) சர்வை ஆகாதநிலங்கள் விஷயத்தில் பைமாஷ் நம்பரும், நிலத்தின் பெயர் இருந்தால் அதின் பெயரும், குறிப்பிட்ட பெயர் இல்லாத விஷயத்தில் சரியான நான்கெல்லையும்.

(d) வீடுகள், கட்டடங்கள், காலிமனைகள் விஷயத்தில், தெருவின் பெயரும் தெருவின் இன்னபக்கம், அல்லது சிரேணியென்பதும், நான்கெல்லையும், முனிசிபாலிட்டியாயிருந்தால் முனிசிபல் நம்பரும்.

(e) விருக்ஷங்கள், கிணறுகள், விஷயத்தில், அவைகள் இருக்கும் நிலத்தின் விபரம மேற்சொல்லிய மாதிரியாகவும்.

(f) பூரா கிராமங்கள் விஷயத்தில், கிராமத்தின் பெயரும் நான்கெல்லையும், அதின் சிலபாகமாயிருந்தால், மொத்தம் இத்தனைபாகம் அல்லது பங்கில், இவ்வளவு பாகம் அல்லது பங்கு என்பதும் அதின் விஸ்தீரணமும்.

(g) பரிசல் துறைவிஷயத்தில், அந்தத்துறையின் பெயரும், நதியின் பெயரும், அந்தத்துறையிருக்கும் கிராமத்தின் பெயரும.

(h) பாசிவிஷயத்தில் அது சம்பந்தமாயுள்ள நதியின் பெயரும், இதுமுதல் இதுபரியந்தம் என்பதும், குளங்கள் ஏரிகள் கிணறுகள் ஆனல் அவைமளின் நான்கெல்லையும் கிராமத்தின் பெயரும்.

(i) நடைவழி முதலான பாத்திய விஷயத்தில் இன்னவிதமான பாத்தியம் இன்ன சொத்திற்குடையவருக்கு இன்ன சொத்தில் உண்டு என்பதும்.

12. பத்திரம் (தஸ்தாவெஜு) பிறப்பிவிக்கப்படுகிற தேதியானது ஸ்டாம்பு வாங்கின தேதியிலாவது அல்லது அதற்குப்பிற்பட்டாவது இருக்கவேண்டியது.

13. தஸ்தாவேஜு ஒரு புறந்தான் எழுதவேண்டியது.

14. தஸ்தாவேஜு எழுதிக்கொடுப்பவர்களுடையவும்பெற்றுக்கொள்பவர்களுடையவும் பெயர்கள், தகப்பன் பெயர், ஜாதி, தொழில், இருப்பிடம் முதலியவைகள் எழுதவேண்டியது.

15. தஸ்தாவேஜியின் ஒவ்வொரு பக்கத்திலும் எழுதிக்கொடுத்தவர்களுடைய சம்மதிக் கையெழுத்து இருக்கவெண்டியது.

(*f*) தானசாசனத்தில் "தான் உயிரோடிருக்கும் வரையில் தன்னைப்போஷிக்கவேண்டு" மென்ற நிபந்தனையின் பேரில் தன்ஸ்திதிகளை வார்சுகட்குக்கொடுத்து தஸ்தாவேஜை எழுதலாம். "அப்படி அவர்கள் நடவாவிட்டால் அந்த தஸ்தாவேஜை ரத்து செய்து தனக்கிஷ்டமானபடி வேறு தஸ்தாவேஜு செய்யலாம்" என்ற ஷ்ரத்துங்காணலாம்.

I

தான சாசனம் (Deed of Gift)

19......ஸு.........மீ ...வ ———டிஸ்திரிக்ட்டு——— தாலுகா———கிராமத்திலிருக்கும்———குமாரன்——— ஜாதி ———தொழில்———க்கு ———டிஸ்திரிகட்டு ———தாலுகா———கிராமத்திலிருக்கும்———குமாரன்——— ———ஜாதி———தொழில்——— எழுதிக் கொடுத்த தானசாசனம்.

(*a*) தாங்கள் எனக்கு உபாத்தியாயரும் குருவுமாயுமிருக்கிறபடியால் தங்களிடம் என்க்கிருக்கும் விசுவாசத்தினல் தங்கள் புத்திர பவுத்திர பாரம்பரியமாய் தானதி விகிமய விக்கிரயங்களுக்கு யோக்கியமாய் சற்வ சுவதந்திரங்களுடன்———டிஸ்திரிக்ட்டு———தாலுகா———சப்டிஸ்திரிக்ட்டு ———கிராமத்தில் அடியில்விவரங்கண்ட நன்செய் புன்செய் நிலங்களை தானமாக நாளது தேதியில் கொடுத்து இந்த தஸ்தாவேஜு எழுதிக்கொடுத்திருக்கிறேன். ஆகையால் தாங்களும தங்கள் வார்சுகளும் சர்வசுதந்திரங்களுடன் அனுபவித்துக் கொள்வதில் நானுவது என் வார்சுகளாவது தடைசெய்யாமலிருக்கக்கடவோம். இந்தப்படி நான் சம்மதித்து எழுதிக்கொடுத்த தான சாசனம்.

சொத்து விவரத்தின் ஷிடியூல்.

சப் டிஸ்திரிக்ட்டு	கிருமம்	அயன் அல்லது இநும்	நன்செய் புன்செ விபரம்.	சர்வை.		விஸ்தீரணம்	ஷரா.
				நி.	லட்டர்.		
							(e) தஸ்தாவேஜ் எழுத வேண்டியவிஷயம் என்பதைகவனித்துஎழுதவேண்டும்.

கையெழுத்து.

சாட்சிகள்.

மூன்றுபேருக்குக்குறையாமல்
இருக்கவேண்டும்.

(a) தானத்தின் உத்தேசமானது எதுவோ அதை எழுதவேண்டும். (1) கிரயம் (2) பரிவர்த்தனை (3) கொதுவைப்பத்திரம் இதுகளைப் பற்றி இனி கூறலாகும்.

இது ஒவ்வொன்றுக்கும் பிரத்தியேகமாய் தனிஷீட்டுகள் தயார் செய்து வைக்கப்படும். அதுகளின் கிரயம் பைசா 6. வேண்டுபவர்கள் "சுகுணசுந்தரம்' ஆபீசுக்கு எழுதிக்கொள்ளவும்.

பெருமாள் திருமொழி.

கண்ணபுரத்தொளிர் காகுத்தன்றாலாட்டு

கலி விருத்தம்

—(*)—

இராகம்; நீலாம்புரி

தாளம்; திருபுடை

1 மன்னுபுகழ் கௌசலைதன் மணிவயிறு வாய்த்தவனே!
தென்னிலங்கைக் கோன்முடிகள் சிந்துவித்தாய்!செம்பொன்சேர்
கன்னிநன்மாமதிள்புடைசூழ் கணபுரத்தென் கருமணியே!
என்னுடைய வின்னமுதே! இராகவனே! தாலேலோ!

[(இவ்வுலகின்கண்)நிலைபெற்ற கீர்த்தியினையுடைய கௌசலையம்மனது அழகிய திருவயிற்றின்கண் கருப்பமுற்றிருந்தவரே! தெற்கு (சமுத்திரமத்தியிலுள்ள) இலங்காபுரிக் (கரசனாகிய) இராவணனது (பத்துத்) தலைகளையும், ஒரு பாணத்தா (லறுத்துத்தள்ளிச்) சிந்திக்கிடந்துருளச் செய்தவரே! சிவந்தநிறமுள்ள தங்கத்தினாலியற்றிய அழிவில்லாத நல்ல பெரிய திருமதில்கள் நாற்புறத்திலுஞ்சுற்றப்பட்டிருக்கின்ற திருக்கண்ணபுர (மென்னுந்திவ்விய தேசத்திலெழுந்தருளி)என்னு(லாசிரயிக்கப்பட்ட) நீலமணிபோலும் காந்தியை உடையவரே! அடியேனுக்கு இனியவமிருதத்தைப் போல் தித்திப்பவரே! இரகுவென்னும் அரசனது வமிசத்திற்பிறந்தவரே! தொட்டிலிலாடுவீராக.]

2 புண்டரீகமலரதன்மேல் புவனியெல்லாம் படைத்தவனே!
திண்டிரலாள் தாடகைதன் உரமுருவச் சிலைவளைத்தாய்!
கண்டவர்தம் மனம்வழங்குங்கணபுரத்தென் கருமணியே!
எண்டிசையுமாளுடையாய்! இராகவனே! தாலேலோ.

[(திருவுந்தித்) தாமரைப்பூவில் பூமிமுதல் சராசரவர்க்கங்களனைத்தையும் தோற்றுவித்தவரே! மிகுந்த பலமுள்ளவளாகிய தாடகையென்னுமரக்கியின் மார்பைப்பிளந்து புறத்திலே பாணம் செல்லும்படி கோதண்டத்தில் நாணியேற்றினவரே! சேவைசெய்தவர்களின் இருதயத்தில் உலாவிக்கொண்டிருக்கின்ற திருக்கண்ணபுரமாகிய திவ்விய தேசத்தில் வசிக்கின்ற என் (கண்ணினுள்ளிருக்கின்ற) கருமணி போன்றவரே! எட்டுத்திக்கிலும் (செங்கோலைச்செலுத்தி) அரசாட்சி செய்தவரே! இரகுமகாராஜன் வம்சோற்பவரே! தொட்டிலில் ஆடுவீராக.]

3 கொங்குமலி கருங்குழலாள் கௌசலைதன் குலமதலாய்!
தங்குபெரும் புகழ்ச் சனகன் திருமருகா! தாசரதீ!
கங்கையிலுந்தீர்த்தமலி கணபுரத்தென் கருமணியே!
எங்கள் குலத்தின்னமுதே! இராகவனே! தாலேலோ!

[வாசனைமிகுந்த கருப்பான அளகபாரத்தையுடையவளாகிய கௌசல்யா தேவியின் வமிசத்திற்குத் திருமகனாயவதரித்தவரே! பெரிய கீர்த்திவாய்ந்த (மிதிலாபுரிக் கரசனாகிய) சனகனது அழகுவாய்ந்த மருமகனே? சக்கிரவர்த்தி திருமகனாரே கங்காநதியைப்பார்க்கிலும் (புண்ணியகரமான) தீர்த்தங்களையுடைய திருக்கண்ணபுரத்தின்கண் வீற்றிருக்கின்ற என் நீலமணிபோன்றவரே! தாசர்களாகிய எங்கள் பரம்பரைக் கூட்டத்தாருக்கு இனிய அமுதம்போல் ருசிப்பவரே! இரகு நாயகரே தொட்டிலிலாடியருளுவீராக.]

4 தாமரைமேலயனவனைப் படைத்தவனே! தயரதன்றன்
மாமதலாய்! மைதிலிதன் மணவாளா! வண்டினங்கள்
காமரங்களிசைபாடும் கணபுரத்தென் கருமணியே!
ஏமருவும் சிலைவலவா! இராகவனே! தாலேலோ.

[நாபிக்கமலத்தில் பிரமதேவனைத் தோன்றப்பண்ணினவரே! தசரதச்சக்கிரவர்த்தியினது பெருமை தங்கிய திருக்குமாரரே! மிதிலாபுரியிலவதரித்த பிராட்டி

யாருக்கு நாயகரே! கூட்டமாகிய வண்டுகள் இசைப்பாட்டுகளை ரீங்கார சப்தத்தினால் பாடுகின்ற (சோலைகளையுந் தடாகங்களையுமுடைய) திருக்கண்ணபுரத்துவாழும் நீலவண்ணரே! பாணங்களோடு விளங்குகின்ற (கோதண்டமென்னும்) வில்லுகளுக்கு ந்திறமையுடையவரே! இரகுவீரரே! தொட்டிலிலாடியருளுவீராக.]

5 பாராளும் படர் செல்வம் பரதநம்பிக்கேயருளி
ஆராவன்பிளையவனோ டருங்கானமடைந்தவனே!
சீராளும் வரைமார்பா! திருக்கண்ணபுரத்தரசே!
தாராளும் நீண்முடியென் தாசரதி! தாலேலோ.

[உலகத்தையாளுகின்ற மிகுந்த சம்பத்தை ஆண்மையிற்சிறந்த பரதாழ்வானுக்கு கொடுத்துவிட்டு, பழகப்பழக வெறுப்பெய்தாத பிரீதியையுடைய இளையபெருமாளுடன் (நடந்துபோதற்) கரிய காட்டிற்கு போயினவரே! அழகுபொருந்திய பர்வதம்போல விசாலமாகிய வக்ஷஸ்தலத்தையுடையவரே; திருக்கண்ணபுரமென்னு திருப்பதிக்கிறைவரே! மாலைசூட்டிய நீண்ட கிரீடத்தையுடைய என் பிரேமைக்குரிய தசரதராஜ குமாரரே! தொட்டிலிலாடியருளுவீராக.]

6 சுற்றமெலாம் பின்றொடரத் தொல்கானமடைந்தவனே!
அற்றவர்கட்கருமருந்தே! அயோத்திநகர்க்கதிபதியே!
கற்றவர்கள் தாம்வாழும் கணபுரத்தென் கருமணியே!
சிற்றவைதன் சொல்கொண்ட சீராமா! தாலேலோ.

[உறவினர்முதலிய நகரவாசிகள் பின்னாகத்தொடர்ந்துவரும்படி பழமையாயுள்ள காட்டுக்குப்போயினவரே! உலகவாசையற்ற யோகிகட்குக் (கிடைத்தற்) கரிய அமிருதத்தைப்போல் இனிமையைச் செய்பவரே! அயோத்தியாபுரிபட்டணத்துக்கிறைவரே! பகவத்குணங்களி லீடுபட்டிருத்தலையுணர்ந்த முமுக்ஷுக்கள் வசிக்கின்ற திருக்கண்ணபுரத்துறையும் என்னுடைய கருமணிபோலும் வண்ணத்தையுடையவரே! சிறிய தாயாகிய கைகேசியம்மனது வாக்கியத்தை சிரத்திற்றாங்கிக்கொண்ட ஸ்ரீராமனென்னுநாமத்தையுடையவரே! தொட்டிலிலாடியருளுவீராக.]

7 ஆலினிலைப் பாலகனா யன்றுலகமுண்டவனே!
வாலியைக்கொன்றரசிளைய வாநரத்துக்களித்தவனே!
காலின்மணி கரையலைக்குங் கணபுரத்தென் கருமணியே!
ஆலி நகர்க்கதிபதியே! அயோத்திமனே! தாலேலோ.

[பிரளயகாலத்தில் வடபத்திரசயனம்பண்ணுகின்ற குழந்தை வடிவத்தையுடையவனாய் பூர்வத்தில் அண்டங்களை உதரமத்தியில்வைத்துக் காத்தவனே! வாலியென்னும் வாநரராஜனைச்சங்கரித்து கிஷ்கிந்தாராஜ்யத்தை அவன் தம்பியாகிய சுக்கிரீவனுக்கு கொடுத்தவரே! கால்வாய்களில் இரத்தினங்களை கரைகளிலொதுக்குகின்ற (நீர்வளமுள்ள) திருக்கண்ணபுரத்தில் வதிகின்ற நீலமணி வண்ணரே! திருஆலி என்னும் திவ்வியதேசத்துக்கு இறைவரே! அயோத்திமாநகரத்துக்குத்தலைவரே! தொட்டிலிலாடியருளுவீராக.]

8 மலையதனாலணைகட்டி மதிளிலங்கையழித்தவனே!
அலைகடலைக் கடைந்தமரர்க் கமுதருளிச்செய்தவனே!
கலைவலவர் தாம் வாழும் கணபுரத்தென் கருமணியே!
சிலைவலவா! சேவகனே! சீராமா! தாலேலோ.

[பர்வதங்களைக்கொண்டு சேதுபந்தனம்பண்ணி மதிள்களையுடைய லங்காபுரியை நாசம்பண்ணினவரே! அலைகளையுடைய திருப்பாற்கடலை மதித்து தேவர்களுக்கு அமிருதத்தைப் பகிர்ந்து கொடுத்தவரே! சாஸ்திரங்களையுணர்ந்த பெரியோர்கள் வசிக்கின்ற திருக்கண்ணபுரத்தில் வசிக்கும் நீலவண்ணரே! வில்வீரரே! சௌரியமுடையவரே! ஸ்ரீராமபிரானரே! தொட்டிலிலாடியருளுவீராக.]

9 தளையவிழு நறுங்குஞ்சித்தயரதன்றன் குலமதலாய்!
வளைவொரு சிலையதனான் மதிளிலங்கையழித்தவனே!
களை கழுநீர் மருங்கலருங்கணபுரத்தென் கருமணியே!
இளையவர்கட்கருளுடையாய்! இராகவனே! தாலேலோ!

[கட்டவிழ்ந்த (மலர்களைச்சூடிய) நல்ல சிகை (யழகினை) யுடைய தசரதமகாராஜனது குலத்துக்குப்புத்திரரே, வளைவினையுடைய ஒப்பற்ற கோதண்டமென்னும் வில்லினால் மதிள்சூழ்ந்த லங்காநகரத்தை நாசமடையச்செய்தவரே! பிடுங்கியெறிகின்ற செங்குவளைகள் பக்கங்களில் மலருகின்ற (வயல் சூழ்ந்த) திருக்கண்ணபுரத்தில் வாழும் என்னுடைய நீலமணிபோலும் நிறமுடயவரே அறிவினாலே சிறியவர்களாகிய (எங்கட்கு) கிருபையையுடையவரே; இரகுநாதரே, தொட்டிலிலாடியருளுவீராக,]

10 தேவரையு மசுரரையுந் திசைகளையும்படைத்தவனே!
யாவரும் வந்தடிவணங்க வரங்கநகர் துயின்றவனே!
காவிரிநன்னதிபாயுங் கணபுரத்தென் கருமணியே!
ஏவரிவன் சிலைவலவா! இராகவனே! தாலேலோ!

[தேவக்கூட்டங்களையும், அசுரக்கூட்டங்களையும், அஷ்டதிக்குகளையும் சிருஷ்டித்தவரே! எவ்வுலகத்திலுள்ளவர்களும் அடைந்து திருப்பாதங்களில் நமஸ்கரிக்கும்படி திருவரங்கம் பெரியகோவிலில் யோகநித்திரை செய்பவரே! நல்ல திருக்காவேரியாறானது பாய்கின்ற திருக்கண்ணபுரத்துறையும் கருமணிபோல்பவரே! பாணங்களையுடைய நெடிதாகிய வலிய கோதண்டமென்னும் வில்லுக்கு வல்லபரே! இரகுநந்தனரே! தொட்டிலிலாடியருளுவீராக.]

11 கன்னிநன்மாமதிள்புடைசூழ் கணபுரத்தென் காகுத்தன்
தன்னடிமேல் தாலேலோவென்றுரைத்த தமிழ்மாலை
கொன்னவிலும் வேல்வலவன் குடைக்குலசேகரன் சொன்ன
பன்னிய நூல் பத்தும்வல்லார் பாங்காயபத்தர்களே.

[அழிவில்லாத நல்ல பெரிய திருமதில்கள் பக்கங்களில் சுற்றப்பட்ட திருக்கண்ணபுரத்துவாழும் என்னுடைய ககுஸ்தன் என்னும் அரசன் வமிசத்தில் பிறந்த

:

ஸ்ரீராமபத்திரனது பாதங்களுக்காக தொட்டிலிலாடுவீராகவென்று, பாடிய தமிழி னுற்செய்த மாலையைக், கொலைத்தொழிலிற்பழகிய, வேலாயுதத்தை வலதுகரத்தி லேந்தியவனுகிய வெண்கொற்றக்குடையினையுடைய குலசேகரப்பெருமாள் மங்கள சாசனஞ்செய்த, புகழப்பட்ட நூல்போன்ற கவிகள் பத்தையும் படித்து அறிந்தவர் கள் ஒழுங்கான தாசர்களாவார்கள்.

குலசேகரப்பெருமாள் திருவடிகளே

சரணம்.

பத்துவித பக்தியின் விபரம்

1. சிரவண பக்தி:—இதை பரிக்ஷித்மகாராஜன் அனுசரித்து பதம் எய்தி னன்.
2. கீர்த்தன பக்தி:—இதை சுகர் அனுசரித்து நற்கதிபெற்றார்; சுகர் பிரம மஞானி.
3. ஸ்மரண பக்தி:—இதை கைக்கொண்டவர் பிரகலாதர்.
4. சேவனு பக்தி:—இதை சதாசெய்துகொண்டிருப்பவள் இலக்ஷ்மி.
5. ஸுஜந பக்தி:—இதைச்செய்து முக்திபெற்றவர் பிருதுமகாராஜன்.
6. வந்தன பக்தி:—இதைச்செய்து பதவியடைந்தவர் அக்குரூரர்; இவருக் குத்தான் பரமாத்மா சதுர்ப்புஜத்துடன் ஆற்றில் ஸ்நாநஞ்செய்யும் போது பிரஸன்னமானுர்.
7. தாஸத்வ பக்தி:—ஹனுமான் இந்த பக்தி செய்து ஸர்வோத்கிருக்ஷ்ட நிலைமையையடைந்தார், இவர் வஜ்ரசரீரமுஞ்சிரஞ்சீவிப்பட்டமும் பெற்றவர்.
8. சக்ய பக்தி:—இதையனுசரித்தவர் அர்ஜுனராஜர்; இவருக்குப் பகவா ன் தேரோட்டி பார்த்தசாரதி என்னும் பெயர்படைத்தார், சிநேக தர்மத்தை நன்றாய் அறிந்தபகவான் தேரோட்டுவதை இழிவென்றெ ண்ணுததுபோல, நேசர்கள் தாங்கள் ஒருவருக்கொருவர் செய்யும் ஊழியத்தை இழிவாகக்கொள்ளமாட்டார்கள்.
9. ஆத்மநிவேதன பக்தி:—இந்த பக்தியைச்செய்து பரமபாக்கியம் பெற்ற வன் பலி. இவனுக்குப் பகவான் வாசற்காப்போனுயிருந்தார்.
10. பிரேமலக்ஷண பக்தி:—இதைப்புரிந்தவர்கள் கோபிகாஸ்திரீகள்.

மேற்கூறிய பத்துவித பக்திகளையும் தனித்தனியே சவிஸ்தார மாய் இப்பத்திரிகை வாயிலாகவே வெளியிடப்படும்.

கீழ்ப்படிதல்

(சிறுவர்கட்கு)

ஒரு குடியானவன் தன் வயலில் ஒரு நாள் வேலைசெய்துகொண்டிருந்தபொழுது, போர்ச்சேவகர்கள் குதிரை சவாரிசெய்துகொண்டு-தன் வயலை நோக்கி வருவதைக்கண்டான். குதிரைகள் வரும்வேகத்தால், அவைகளின் காலடிகளால் மிதிபட்டுத்தன் வயலில் அப்பொழுது செழிப்பாய்த்தளதளவென்று இருந்தபயிர் கெட்டுப்போகுமென்று, தன்னுடைய அந்தஒரே வயலில் அவ்விராணுவச்சேவகர்கள் குதிரைகளைச்செல்லவிடுவதில் மனமொப்பாமல், அவர்களில் ஒருவரும் தன் வயலில் நுழையக்கூடாதபடி கண்டிப்பாய் உத்திரவளித்து தன்னிடம் வேலைசெய்துகொண்டிருந்த பையன்களில் ஒருவனை வயலின் நுழைவாயிலில் பத்திரமாய்ப்பாதுகாக்கும்படி அனுப்பினன். பையன் அவ்வாறு சென்று படலைச்சாத்திகொண்டு வயலின் நுழைவாயிலில் அதிஜாக்கிரதையாயிருந்தான்

உடனே போர்ச்சேவகர்கள் உருவின கத்தியுங்கையுமாய் பையனைப்பார்த்து, படலைத்திறக்கும்படி கேட்டார்கள், பயமுறுத்தினார்கள், நயமொழியும்புகன்றார்கள், பரிசளிப்பதாயும் சொல்லிப்பாரத்தாகள்; பையன் எதற்குங்கலங்காது படலைத்திறக்கமாட்டேனென்றே சாதித்தான். பிறகு அவர்களில் ஓர் வீரன் பையன் சமீபம் வந்து "பையா! நான் இப்பூமண்டலத்தையாளும் அரசன், நாங்கள் இவ்வாயிலின் வழியே செல்வதற்காகச்சற்றே படலைத்திறக்கவேண்டும், அவ்வாறு நான் கட்டளையிடுகிறேன, நீ கீழ்ப்படிந்து உள்ளே செல்லவிடுவாயா? மாட்டாயா? என்னசொல்லுகின்றாய்?" என்றான்

பையன் உடனே வணக்கமாயும் விநயமாயும், "பூமண்டலத்தையாளும் அரசன் என்னை என் எஜமானன் கட்டளையை மீறி நடக்க விருப்பமுறார் என்று விடையளித்தான். அப்பொழுது அவன் பையன் மொழிகட்குவந்து பையன் கையில் ஒரு சாவரன் இனும் கொடுத்துவிட்டு, போர்வீரர்களைப்பார்த்து உங்களைக்கொண்டு யான் உலகமனைத்தையும் வெல்லமாட்டுவேன், வந்த வழியே திரும்பிச்செல்லுங்கள் என்றான்.

ஆதலால் உத்தமகுணமுடையவர்கள் எத்தகைய இடுக்கண்வந்தபோதிலும் தாங்கள் செய்யத்தக்கவைகளைச்செய்து நன்மையே பெறுவார்கள்,

கனவான்களே

ஆரியமு மாங்கிலமு மாசறு தென்னாட்டிலகு
சீறிய நந்தமிழைச் சீறியே—பூரியரின்
வந்து *நலியவய மிழந்ததைத் தமிழீர்
முந்துமின் காப்பமுயன்று.

இத்தேயத்தில் சிருட்டிகாலந்தொடங்கிப் பெருமைபெற்று வழங்கிவரும் நமது தமிழ்ப்பாஷை, சிவபெருமான் முருகக்கடவுள்முதலிய தேவர்களாலாராயப் படும் தெய்வீகமுடையதாயும், அகத்தியமுனிவர் அதங்கோட்டாசான்முதலிய இருடிகட்கினிமைதோன்றுஞ்சொன்னயமுடையதாயும், பொய்யடிமையில்லாத புலவராதி நல்லறிவாளர் தினைத்தாடிப் போதுபோக்க விரும்பப்பட்டதாயும், சேரசோழ பாண்டியரென்னுந் திருந்தலர்க்கடந்த பெருந்தகையரசகோளரிகளாற் கண்ணை யிமைகாக்குமாறுபோற்பிரிந்து காக்கப்படுவதாயுமிருந்ததற்குக் காலவேறுபாட்டால் ஆரியமோர்பாலும் ஆங்கிலமோர்பாலுமாய் நின்று நெருக்குதலின், அவைகட்கிவ்விடத்தைத்தத்தம்பண்ணிவிட்டுப்புறம்போகத் தலைப்படுகின்றது. சிலகாலத்திற்குமுன் ஐதராலிமுதலிய மகம்மதியவரசர்களால், நமது நாட்டார் தங்கள் சுதந்திரங்கெட்டுச்செல்வங்களையும், புராதன தமிழ்நூல்களாகிய கல்விகளையுமிழந்தாற்போல நமது தமிழ்ப்பாஷையும் வேற்றுநிலத்துப்பாஷைகளாற்றனது சொல்லின்பம்பொருளின்பங்களை யிழக்கப்போவதாயிருக்கின்றது. புராதன தமிழ் நூல்களில் சில அம்மகம்மதியவரசர்கள் கண்கட்குப்புலப்படாமல் எஞ்சியிருந்தவைகள் தற்காலத்தில் இறத்தற்கேதுவாய நோய்கொண்டிருப்பவைகளைக்கண்ணுற்று மருத்துவனைப் போல் சிகித்சைசெய்துவரும் நமது கும்பகோணம் காலேஜி தமிழ்ப்பண்டிதர் பிரமஸ்ரீ உ-வே சாமிநாதய்யர் அவர்கட்குக் கடவுள் தீர்க்காயுளையும், சரீரதிடத்தையும் அருளுமாறு அக்கடவுளைத்துதிபுரிவதுடன் அவ்வய்யரவர்கள் செய்யும் நன்றியை மறவாத கடமைபூண்டிருப்போமாக.

நமது காருண்ணிய கெவரன்மெண்டார் நம்மை தீயவரசரின் சிலுகுக்கிலக்காகாமல் பாதுகாப்பதுபோல நமது அரிய தமிழ்ப்பாஷையையும் அக்கவரன்மெண்டார் தங்கள் கருணை நிரம்பிய கடைக்கண்களாற்பார்த்தளிக்குங்காறு மித்தமிழை இயன்றவரை நாம் அபிமானிக்கக்கடமைப்பட்டிருத்தலின் இதற்குச்சாதகமாயுள்ளவை தமிழ்ப்பத்திரிகைகளேயாம்.

இப்போது வழங்கிவரும் தமிழ்ப்பத்திரிகைகளுள் இச்சுகுணசுந்தரமும் ஒன்றாய் 1902ஆ மேமீ முதல் துவக்கி நடத்தப்பட்டு வருகிறது. இது இந்நாட்டில்நிலைபெற்று உலாவுதற்பொருட்டுத்தத்தமக்கியன்ற நன்கொடையையளிக்கவும்,இப்பத்திரிகையைத் தருவித்து அபிருசியுடன் வாசிக்கவும், இதன்கணுள்ள விஷயங்களின்உண்மைகளைப் பிறருக்கு எடுத்துக்கூறவும், புத்திமான்களாகிய கனதனவான்களை வேண்டுகின்றோம். இப்பத்திரிகையுடனனுப்பப்படும் "நன்கொடை" (Donation) பாரத்தில் அவரவர்கள் அளிக்கப்படும் நன்கொடை (Donation) விவரத்தை எழுதி யனுப்பப்படுமாகில், அதனையிப்பத்திரிகையின் நிலைபேறுக்குச்சாதகமாய் நன்றியறி

---

*நலிதலாவது தமிழின்கண் அவ்வச்சொற்களை விரவிவழங்குதல்.

தலுடன் பெற்றுக்கொள்ளப்படுவதோடு அக்கொடையாளிகளை இப்பத்திரிகையிலும் பிரசித்தஞ்செய்யப்படும்.

"சுகுணசுந்தரம்" ஆபீசு
துறையூர், முசிரிதாலுகா.

சஹகமனம்.

அதோபார்! ஓர் சவத்தை நான்கு அந்தணர்கள் தூக்கிக்கொண்டு போகிறார்கள். சவத்திற்கடுத்தாப்போல் ஓர் பெண்மணி மூன்று எலுமிச்சம்பழங்களை 'அம்மானை' ஆடிககொண்டே போகின்றாள். அவள் உடுத்தியிருப்பது ஓர் மஞ்சள் ஆடை ஆயினும், அவளுக்கதுவும் அழகைத்தருகின்றது. அவள்முகம் இன்றுமலர்ந்த தாமரை மலருக்கொப்பாயிருக்கிறது. அவளுடைய விலாசமான கண்கள் துயரமுறவேயில்லை. கொழுநனுடன் தானும் வானுலகடையப்போகிறதாக எண்ணி யன்றோ அவள்முகம் பிரகாசிக்கின்றது. அவள் நல்ல யுவதியாகக் காணப்படுகிறாள். பரமசுகமான மோக்ஷத்தைக்கருதி இகப்பற்றை ஒழித்தவளானபடியால், புன்சிறிப்புடன் அவள் கவலையற்று காணப்படுகிறாள். சவத்திற்கு முன்னால் சுமார் 7 வயதுள்ள ஓர் அழகிய பையன் விம்மி விம்மி அழுதுகொண்டே வேறொருவன் சகாயத்தை மேற்கொண்டு அக்நியை ஓர் சட்டியில் கொண்டுபோகிறான். பின்னால் விரிந்த கூந்தலுடன் சற்றேரக்குறைய மேற்சொன்னவளுடைய சாயலைப்போன்றே அழுதவண்ணம் ஓர்பெண் இடுப்பில் ஒருபெண் குழந்தையை தூக்கிக்கொண்டு செல்லுகிறாள். அக்குழந்தை கதருகிறதைப்பார்த்தால் அதிக விபசனத்தை உண்டுபண்ணுகிறது. அவளுக்குப்பின்னால் அநேகஸ்திரீ புருஷர்கள் துக்கத்தில் ஆழ்ந்து செல்லுகின்றார்கள். இக்கூட்டத்துடன் நாமுஞ்செல்வோம். எவ்வாறு மேற்கூறிய பெண்மணி உடன்கட்டையேறித்தன்னுயிரைப் போக்குகிறாளோ பார்த்துவருவோம். அதோ பார்! அகில், சந்தனமுதலான கட்டைகளை ஏராளமான நெய்யில் நனைத்துச்சிதையாக அடுக்கியிருக்கிறார்கள். அதில் இரண்டுபேரைத்தாராளமாய் சமஸ்காரஞ்செய்யலாம். அதற்கு 10, 15 அடி தூரத்தில் சவத்தை இரக்கியிருக்கிறதைப்பார். தன் உறவினர்களையும், தோழிகளையும், தன் கண்கள் போன்ற இரண்டு குழந்தைகளையும் விட்டு விலகித்தன் கொழுநனது முகத்தை நோக்கியபடியே இருக்கின்றனள் பார் அப்பெண்மணி. இவ்வுலகவின்பங்களையெல்லாம் முற்றுங்களைந்தாள். ஏழுவயது பாலகனான தன் குமாரனுடையவும், இரண்டு வயதுள்ள தன் பெண்குழந்தையினுடைய ஓயாத அழுகையை அவள் கவனித்தவளில்லையே. அவள் மனம் இளகவில்லை பார்த்தாயா? அவ்விரண்டு குழந்தைகளின் துயரத்தைப்பார்

த்து கண்ணீர் விடாதவர்கள் கிடையாது. தாய்மனம் சஞ்சலப்படாதிருக்குமா? 'தாய் மனம் பித்து,' என்ற வசனத்தை அவள் பொய்யாக்குகிறாள். அவள் வைராக்கியந்தானென்னே? இவ்விளவயதில் அவள் இவ்வெண்ணம் படைத்ததுதான் விசேஷம். அவளுக்குச்சற்கதி கிடைப்பது திண்ணம்.

இதோபார் ஒருவள் அவ்விளங்குழந்தையை அவளிடம் கொண்டு வந்து விடுகிறாள். அவள் அவளை நோக்கி மொழியும் மொழிகளைச் சற்றே கேட்போம், "அடி மீனாட்சி! இனி எனக்கு குழந்தையினாலாவதென்? இத ற்கும எனக்குமென்ன சம்மந்தமிருக்கிறது? பூர்வவினையித்துடன் ஒழிந்தது. உங்களெல்லாரையுந் துரக்ககாலம் வாய்த்தது; என்னை விட்டு அகலுவாய்;" என்று மொழிந்ததைககேட்டு என்மனம் பதைக்கின்றதே, இன்னும் ஏதோ சொல்ல எத்தனிப்பதாய் காணப்படுகிறது சற்றே கவனி, "எல்லாரும் என்பேரில் கிருபைகூர்ந்து எனது நாயகனுடன் என்னையுமிச்சிதையில் வைத்துத் தகன சமஸ்காராதிகளைச் செய்து என்னைப்பற்றிய கவலையை ஒழித்துச்செல்லுங்கள். நீவிர் எல்லோரும் படுந்துயரத்தினும் பையன் கோபாலன் துயரமதிகரிக்கின்றது. அவன் பெற்றோர்களாகிய எங்கட்குச்செய்யவேண்டிய கருமங்களைச்செய்துவிட்டு இல்லமேகி சுகமேயிருக்கக்கடவன்" என்கிறாளே எனக்கும அழுகை வருகின்றது, நீயும் அழுகிறாயே, எல்லாரும் கூச்சுரவிடுகிறார்களே, இதை வாசிப்பவர்கள்தான் அழாமலிருப்பார்களா?

அதோ பார்த்தனையா அவள் அவளுடைய நாயகனைத் தன் கைகளாற்றடவிக் கொடுத்துக் கொண்டு, மனதில் ஏதோத்தியானஞ்செய்தவண்ணமிருக்கிறாள். வர வர அவள் மனம் வைராக்கியமடைகின்றது பார். அவள் உணர்ச்சியற்றவளென்றே சொல்லலாம். தன்னையே மறந்தாள்.

இதோபார், ஒருவள், "அடி கமலாட்சி! உனக்கென்ன குறை; இராஜாபோல் ஓர் பிள்ளையும் தங்கம்போல் ஒரு பெண்குழந்தையுமிருக்கிறார்களே, அவர்கள் கதறுகின்றார்களே அவர்களைக்கொஞ்சம் சமாதானப்படுத்தலாகாதா?" என்றும், வேறொருவள் அடிகமலா! உன் வைராக்கியமென்ன வைராக்கியமோ இதுவரையில் நீ உலகத்தார் மகிழ தக்காருக்குத்தக்கபடி சாந்தமே உருவாய்க்கொண்டு ஈசுவரியைப்போல் விளங்கினாயே, இப்போது குழந்தைகளின் கதறுதலைக்கேட்டாயினும் உன் மனமிழகாதோடி," என்றும் "மற்றொருவள் அடி பெண்ணே! என்ன உன் சாஹசம்; என்ன பாபம் பண்ணியோ என் துரையான நாராயணசாமி இவ்வுலக வாழ்க்கையைத்துறந்தான் தங்கக் கொடிக்கொப்பான நீயும் அவனுடன் சென்றால் நாங்கள் என்னசெய்வது? எங்களுக்காக உன் மனம் இளகாவிட்டாலும், உன் குழந்தைகளின் கதறுதலையாயினும் கேட்டு மனமிளகாதோடி!" என்றும், பின்

னுமொருவள் அடி தோழி கமலா! இந்தா உன் குழந்தை, அதற்குக்கடைசியாக முலைஉண்பித்து சமாதானப்படுத்தேன்டி என்றும் சொல்லும் வார்த்தைகளைகொஞ்சமேனும காது கொடாமலே சவத்தைக்கட்டிக்கொண்டு படுக்கிறாளே ஐயோ! பேச்சு மூச்சடங்கிப்போய் விட்டது என்று எல்லாருங்கூக்குரலிட்டார்களே என்ன ஆச்சரியம். இவ்வித ஒற்றுமையல்லவோ சதிபதிகட்கு வேண்டும். கிரமப்படி சரமகைங்கரியங்கள் எல்லாம் விதிப்படி நடத்தவும் ஆரம்பிவித்துவிட்டார்கள். நாமும் இத்துயரத்தினின்றும நீங்கிச்செல்வோம.

மேற்கூறியபடியே பூர்வத்தில் அநேகசுற்பரசிகள் சஹகமனஞ்செய்திருக்கிறார்கள். ஆகையால் தான் அக்காலத்தில் விதவைகள் கிடையாது. அநேகமாய் பர்த்தா முன்னிறப்பதே துர்லபம். அப்படி சம்பவித்தாலும் அக்காலத்துப்பெண்கள் பர்த்தாயிறந்தபின் தாங்கள் கைம்பெண்களாயிருந்து வாழ இச்சைப்படுகிறதேயில்லை. கொழுநனுடன் தம் வாழ்வையும் முற்றுங்களைந்து விடுவார்கள்.

அந்த வழக்கத்தையனுசரித்து இக்கலிகாலத்திலும சககமனம் சிலநாள் நடந்துவந்தது. ஆனால் சில பெண்கள் உயிர்துறக்க இச்சைப்படினும் முன்காலத்தவரைப்போல் அவர்கட்கு இக்காலத்தில் உயிர்சுலபத்தில் போவதில்லை. ஏதோ வைராக்யத்தினலாயினும், அதிக துக்கத்தினலாயினும் மாமிநாத்திகள் முதலியவர்களின் கொடுமையினுலுண்டாய வெறுப்பினுலாயினும், என் கொழுநனை விட்டு நானிரேன், என்னையுங்கூட உடன்கட்டையேற்றித்தகன சமஸ்காராதிகளைச்செய்து விடுங்கள் என்றால் போறும். உடனே அவளை அவ்வாறு வதைசெய்யத்துணிந்து சிதையில் ஏற்றுவித்துத்தகனஞ்செய்யும்போது, நெருப்புசாச்சுவல்யமாய்ப்பற்றி எரியுங்கால்அவளுடைய 'ஐயோ,அப்பா' என்ற கோரமான சப்தத்தைக்கேட்க ஒட்டாமல், 'நாராயண, நாராயண' என்றும், 'கோவிந்த, கோவிந்த' 'கிருஷ்ண, கிருஷ்ண' என்றும், பக்கத்திலுள்ளவர்கள் கூச்சல் போட்டுக்கொண்டே அவளை மறுபடி வீட்டிற்கழைத்துச் செல்லக்கூடாதென்று நிற்பந்தித்துக் கொலைசெய்துக்கொளுத்திவிட்டு வருவது வழக்கமாயிருந்தது. அந்தக்கோரத்தை ஒருவரும் பார்க்கத்துணியார்கள். அந்த வழக்கத்தை நமது காருண்ய கவரன் மெண்டார்கள் முற்றும் நீக்கி விட்டார்கள். முற்காலத்தில் சித்த வைகல்யமில்லாமல் தர்மாதர்மங்கள், பாபபுண்யங்கள், நன்மை தீமைகளையறிந்து ஸ்திரீ புருஷர்கள் சன்மார்க்கத்தில் ஒழுகி நடந்து வந்தபடியால் சககமனம் சிறப்பெய்தியது. இக்காலத்தில் அப்படியின்மையால் சககமனம் துக்கத்திற்குக்காரணமென்று கருதியே அது கூடாதென்று இராஜாங்கத்தார் கண்டிப்பாய் உத்தரவளித்தபடி அவ்விதக்கஷ்டங்களினின்றும் ஸ்திரீகள் நிவர்த்தியாகி நிம்மதியாகவிருக்கின்றார்கள்.

சுகுணசுந்தர வாழ்த்து

சிவஷண்முகன்றுணை,

அறுசீர்க்கழி நெடிலடியாசிரிய விருத்தம்

1 சொற்கொண்ட தருகீர்த்தி யாங்கணுஞ் சென்றுலாவலுறத் துலங்கிநாளும்
அற்கொண்ட றவழ்தருபொற் சிகரபரி சன்னியப்பேரசலமாகும்
விற்கொண்ட பேராற்ற லொருகடவு டிருவருளை விழைவினோடு
முற்கொண்ட தகைமையினான் மன்பதைக்கு மூதறிவு முதிரமாதோ,

2 பல்லாற்றி னிறைமகனுக் கவ்வப்போ தமைதருவ பரிவினாடி [புண்
சொல்லாற்றன் மிகவுமுறீஇ நுனிக்குமதி பெருகமைச் சின்றூய்மை மா
வல்லாற்றினெவ்வெவர்க்கும் வலியுறுத்து நன்குணர்த்தும்வகைமையாலே
நல்லாற்றல் பெருசுகுண சுந்தரநாமத்துலவு நண்பகேட்டி

3 முன்னாளின் முச்சங்கத்திசையின் வளர்ந்தெம்மொழிக்கு முதன்மைத்தாகி
யென்னாளு மிதனுயர்வெற் றேயெனயேத் திடுதமிழெழற்கருளினாலே
இந்நாளினறிவுறுத்து மிராமலிங்க தேசிகன்ற னிசைப்பின் வல்லே
மன்னார்வத்தெனைநாடி வந்தனையா லுன் னுரிமை மறக்கற்பாற்றோ

4 நதிபதிப்பேரறுவைபுனை யகலிடத்து நாலுணர்வினாளுநாளும்
மதிபதியும் புலவர்கடா மிதற்கிப்பே ரிடுகுறியான் வந்ததன்று
துதிபதியும் காரணத்தாற் போந்ததெனச் சொற்றரவே துன்னியர்க்குங்
கதிபதியு மியல்புநனி காட்டியவகுணமிரித்துக் கதித்துவாழ்நீ

5 பண்பயிலுந் தென்மொழியிற் பஃறிறத்தானுலவிவரு பத்திரிக்கை
எண்பயில விசைப்பரிதன் னவற்றினின் மிக்கேற்றமுறவியைந்தெஞ்ஞா
ன் றும
விண்பயிலுங்கடவுளரிற் பசுபதியுமந்திரத்துண் விழைவினார்க்கும்
கண்பயிலுமைந்தெழுத்து மெனநிதநீ யிவ்வுலகிற் கவின்று வாழ்க.

6 முயற்சிதிரு வினையாக்கு மென்னு முதுறைமொழியை முன்னிநெஞ்சி
னயற்சியற வினைநடத்தத் துணிவுகொளு மறிஞனு மாதரத்தின்வாழ்க
பயிற்சியுற வுனக்குதவு பெருந்தகைமை யிறைமகனும் பரிவின்வாழ்க
வுயர்ச்சிபெற வுனதொழுக்கி னொழுகு நரும் வசுந்தரையினோங்கி வாழ்க.

சி. வி. தில்லைநாயகமுதலியார்.

ERRATA.

பக்கம்	வரி	பிழை	திருத்தம்
77	24	कूर्चायते	कूर्छायते ।
ஷை	27	भक्तिकिन्दुकरोति	भक्तिः किन्नकरोति ॥

To our Subscribers.

The manager requests those, who have not as yet sent in their Subscription, to be pleased to intimate to him their desire of being enlisted by the year or otherwise through a post card and kindly remit the Subscription, within a fortnight from the date of receipt of this issue. In the event of failure to receive the said information or the Subscription, the manager will be necessitated to despatch the next issue by V. P. Post.

நமது சந்தாதாரர்களுக்கு

அறிவிப்பு.

நமது கையொப்பக்காரர்களில் அநேகர் தங்கள் சந்தாத்துகைகளைச்செலுத்தியும், செலுத்திக்கொண்டுமிருக்கிறார்கள். செலுத்தாத ஏனையோர் தங்களைச்சந்தாதாரர்களாக ரிஜிஸ்தர் செய்துகொள்ளவேண்டியதற்கும், அல்லது தங்கள் விருப்பத்திற்கிணங்க எவ்விதஞ்செய்யவேண்டுமோ அதற்கும் காலணாகடிதமூலமாய் எம்மீது அன்புகூர்ந்து தெரிவிக்கவேண்டுமாயும், அப்படிப்பத்திரிகை பெற விரும்புவோர் தங்கள் சந்தாத்துகையை இன்னும் பதினைந்து தினத்திற்குள் தயவுசெய்து அனுப்பவேண்டுமாயும், கேட்டுக்கொள்ளப்படுகிறது.

மேற்கூறியபடி காலணா கார்டாவது, சந்தாத்துகையாவது அனுப்பாத பத்திரிகாநேயர்களுக்கு அடுத்த சஞ்சிகையை வி. பி. தபால்மூலமாக அனுப்பப்படும்.

TO OUR CONTRIBUTORS.

The Editor will thankfully receive all suggestions towards the improvement of the journal.

Suguna Sundaram Office
Turaiyur.

விஷயமெழுதும் நேயர்கட்கு.

இப்பத்திரிகை விருத்திக்கு வரும்பொருட்டு அப்போதைக்கப்போது தெரிவிக்குஞ்சமாசாரங்களை வந்தனங்களுடன் அங்கீகரிக்கப்படும்.

சுகுண சுந்தரம் ஆபீசு,
துறையூர்.

T. S. S.

LIST OF GENTLEMEN WHO PATRONIZE THE SUGUNASUNDARAM.

1 Sri Ambalavana Desikar Pandara Sannithi, Thiruvavadudurai.
2 Sri Cithambara Sivaprakasa Pandara Sannithi, Turaiyur.
3 M. R. Ry. P. Pandithoray Thevar Avergal, Zemindar of Palavanthan.
4 „ Prasanna Venkatachalla Reddi Garu, Zemindar of Turaiyur.
5 „ S. Annamalai Pillai Avl., Pensioned Tahsildar & Manager, Zemindar's Office, Turaiyur.
6 „ A. Ganapathy Iyer Avl, Sub-Registrar of Turaiyur.
7 „ Srinivasa Aiyengar Avl., Sub Magistrate, Perambalur.
8 „ V. Srinivasachariyar Avl., B. A., Sub Registrar, Dharapuram.
9 „ P. S. Venkatasubramania Aiyar Avergal, B. A., Stationery Sub-Magistrate, Trichinopoly.
10 „ T. A Swaminatha Iyer Avergal, B. A., S. H. O., Padalur.
11 „ T. K. Guruswami Aiyer Avergal, 1st Assistant, Board Middle School, Tirucoilur.
12 Brahma Sri Paramesvara Dhekshathar Avergal, Chidambaram.
13 M. R. Ry. W. V. Swaminatha Iyer Avl., Tamil Pandit, Kumbakonam College.
14 Sriman Ramakrishna Battachariar Avergal, Sanskrit Pandit, Bhaskarapuram.
15 „ S. A. M. Seshadhri Achariar Avergal, Sanskrit Pandit, Chatusastra Vada Kulpaka tharu Vidyasala, Kumbakonam.
16 M. R. Ry. Kothanda Ramanujachariar Avergal, Head Master, Z. L. S. School, Turaiyur.
17 „ S. Madhurainayakam Pillai Avergal, Mirasdar, Abharana-dhari, Sikkal.
18 „ S. Adaikalam Pillai Avergal, Pleader, Turaiyur.
19 „ M. S. Pathmanaba Iyer Avl., Pleader, Turaiyur.
20 „ K. Sankaralinga Mudaliar Avergal, Proprietor, Dodson Press, Trichinopoly.
21 „ T. S. Naga Ratnam Iyer Avergal, Clerk, Postal Supt's Office, Trichinopoly.
22 „ M. A Pichayya Vanniar Avergal, Tamil Pandit and V. M., Mariamman Coil, Tanjore District.
23 „ G. Krishnier Avl., Supervisor of Schools, Dharmapuri Tq.
24 „ Varadavengadam Pillai Avl, V. M. Alangudi Tanjore Dt.
25 „ G. Krishnier Avergal, Goppichettipolayam.
26 „ T. Srikanta Iyer Avergal, Rev. Inspector, Dharapuram Tq.
27 „ G. M. Chithambara Iyer Avergal,, Tamil Pandit, K. H. School Tanjore.
28 „ T. Venkataramana Aiyar Avl., Pleader, „
29 „ Ramanuja Iyengar Avl., 2nd Grade Pleader, Srirangam.
30 „ Sathasivam Pillai Avl., Supervisor of Schools, Cuddalore.
31 „ Rama Iyer Avergal, do. Srirangam.
32 „ V. Thillanayaga Muddaliar Avergal, Tamil Pandit, Chithambaram.
33 „ Marudamuthu Padayachi, Contractor Turaiyur.
34 „ S. Muthu Aiyar Avl., B. A., H. H. School, Musalipatam.